Registered as a Newspaper

முச்சந்தி முரளி




# உதயன்

சுடர் : 37 கதிர் : 244 | வியாழக்கிழமை 28 ஜுலை 2022 | ஆடி 12 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 12 விலை : ரூ. 50

தனித்தனியாக

# போராட்டக்காரர்களை வேட்டையாடுகிறது அரசு!

சர்வாதிகாரியாக மாறும் ரணில்; அச்சத்தில் மக்கள்

கொழும்பு, ஜுலை 28

கொழும்பில் மக்களை ஒன்றுதிரட்டிப் போராடியவர்களை, தனித் தனியாக வேட்டையாடும் பணியை ரணில் அரசு முடுக்கிவிட்டுள்ளது. 11

## அமைச்சைப் பெறுவதற்கு எவருடனும் பேசவில்லை!

ஹர்ஷ டி சில்வா தன்னிலை விளக்கம்

கொழும்பு, ஜுலை 28

சர்வகட்சி அரசாங்கத்தில், ஹர்ஷ டி சில்வாவுக்கு நிதி அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது என்று வெளியான கருத்துக்களை அவர் திட்டவட்டமாக மறுத்துள்ளார். 11

இலங்கையின்

## உதவிக்கான குரலுக்கு சீனா பதில் தரவில்லை

சமந்தா பவர் தெரிவிப்பு



கொழும்பு, ஜுலை 28

இலங்கை பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டவேளை இந்தியா துரிதமாக உதவியது. ஆனால், சீனா உதவிக்கான குரலுக்குப் பதில் 11





## மஹிந்த, பஸிலுக்கு பயணத்தடை நீடிப்பு

கொழும்பு, ஜுலை 28

மஹிந்த ராஜபக்ச மற்றும் பஸில் ராஜபக்ச ஆகிய இருவருக்கும் விதிக்கப்பட்டுள்ள பயணத்தடை நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானவர்கள் என்று சிலரின் பெயர்களைப் பட்டியலிட்டு சிவில் அமைப்பினராலும் சமூகச் செயற்பாட்டாளர்களாலும் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. 11

## ரணிலை ஆதரிக்கவுமில்லை; பணமெதுவும் பெறவுமில்லை!

தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுக்கிறார் சித்தார்த்தன்

யாழ்., ஜுலை 28

நிறைவேற்று அதிகாரம்கொண்ட எட்டாவது ஜனாதிபதித் தெரிவின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த தீர்மானங்களுக்குப் புறம்பாக நான் செயற்பட்டேன் என்றும், ரணிலை ஆதரிப்பதற்காகப் பெருந் தொகைப் பணத்தை அவரிடம் இருந்து பெற்றுக் கொண்டேன் என்றும் வெளிவந்துள்ள தகவல்கள் ஆதாரமற்றவை என்று தெரிவித்தார் 11

## சுமந்திரனின் கருத்துகளால் தூதரகப் பிரச்சினைகள்!

சித்தார்த்தன் சரமாரித் தாக்குதல்!

யாழ்., ஜுலை 28

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரன், அனுபவ முதிர்ச்சியற்று வெளியிடும் கருத்துக்களால் தூதரக ரீதியான பிரச்சினைகள் ஏற்படும் அளவுக்கு நிலைமையுள்ளது என்று குற்றஞ்சாட்டினார் நாடாளுமன்ற உறுப் 10

## ஊசி மூலம் ஹெரோய்ன் இளைஞர் பரிதாபச் சாவு!

இந்த மாதத்தில் இரண்டாமவர்

யாழ்ப்பாணம், ஜுலை 28

ஹெரோய்ன் போதைப்பொருளை ஊசிமூலம் எடுத்துக்கொண்ட இளைஞர், இருதயத்தில் கிருமித் தொற்று ஏற்பட்டு நேற்றுமுன்தினம் 10

வடக்கு மாகாணத்தின்

## முத்த அதிகாரிகள் நால்வரின் பதவிநிலை திடீரென பறிப்பு!

ஆளுநரின் தனிப்பட்ட பழிவாங்கலா?

யாழ்ப்பாணம், ஜுலை 28

வடமாகாணத்தினுடைய முக்கியமான பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகிக்கும் நால்வரின் பதவிகள் மீளப்பெறப்பட்டு அவர்களினுடைய அதிகாரங்கள் வெறிதாக்கப்பட்டுள்ளன. வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவால் பொறுப்பு வாய்ந்த செயலாளர்களுக்கு இது குறித்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. வடமாகாண உள்ளூராட்சி 11

## வாள்வெட்டு: ஒருவர் பலி!

முள்ளியவளையில் பயங்கரம்

முல்லைத்தீவு - முள்ளியவளை தெற்குப் பகுதியில் இளைஞர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கம் வாள் வெட்டாக மாறியதில் ஒருவர் உயிரிழந்தார். 10

## புதிய அரசாங்கத்துக்கு அமெ. ஒத்துழைக்கும்!

ரணிலிடம் தெரிவித்தார் அமெரிக்கத் தூதுவர்

கொழும்பு, ஜுலை 28

புதிய அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்கும் என்று ஜனாதிபதி ரணிலிடம் தெரிவித்தார் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்.

அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், 10

## அவசரகாலச் சட்டத்துக்கு நாடாளுமன்றம் அனுமதி!

கூட்டமைப்பு எதிர்த்து வாக்களிப்பு

120 பேர் ஆதரவு

63 பேர் எதிர்ப்பு

கொழும்பு, ஜுலை 28

நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டத்துக்கு நாடாளுமன்றம் நேற்று அனுமதி வழங்கியது. இதனால், அடுத்த ஒரு மாதத்துக்கு நாட்டில் அவசரகால 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஒப்பந்தங்களை ரணில் நிறைவேற்றக்கூடும்

## சந்தேகம் எழுப்புகின்றார் திஸ்ஸ



**கொழும்பு, ஜூலை 28**

**நல்லாட்சி அரசாங்கத்தில் அமெரிக்காவுடன் செய்துகொள்ள முடியாமற்போன ஒப்பந்தங்களை ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருப்பதால் அதனை மேற்கொள்ளும் அபாயம் இருக்கின்றது. நாட்டுக்கு ஆபத்தான ஒப்பந்தங்களை செய்ய முற்பட்டால் அதைத் தடுப்பதற்கு மக்கள் தயாராக இருக்கவேண்டும்.**

இவ்வாறு லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சோஷலிஸ மக்கள் முன்னணி நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்திய ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் ஆணை இல்லாமலே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாடாளுமன்றத்தில் எந்த உறுப்பினரும் இல்லாத நிலையில் சிறிலங்கா பொதுஜன பெரமுன ஊடாக ராஜபக்சவினரே அவரை ஜனாதிபதியாக நியமித்துள்ளனர்.

பொதுஜன கட்சியின் தவிசாளர் பஸில் ராஜபக்ச அமெரிக்க பிரஜா உரிமை உடையவர். ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கத் தனது கட்சியை இணக்கப்பாட்டுக்குக் கொண்டுவர அவரே பின்னால் இருந்து செயற்பட்டுள்ளார்.

அமெரிக்காவுக்குத் தேவையான முறையில் ஆட்சியைக் கொண்டு செல்லவே ரணில் விக்கிரமசிங்க தற்போது செயற்பட்டு வருகின்றார். நல்லாட்சி அரசாங்கத்தில் அமெரிக்காவுடன் 3 ஒப்பந்தங்களைச் செய்துகொள்ள ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டிருந்தார்.

அதில் அக்டா ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. ஏனைய இரண்டு ஒப்பந்தங்களான எம்.சி.சி. மற்றும் சோபா ஆகிய இரண்டு ஒப்பந்தங்களும் மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டன. இந்த இரண்டு ஒப்பந்தங்களும் நாட்டுக்குப் பெரும் ஆபத்தாகும்.

நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க தற்போது நாட்டின் ஜனாதிபதி. அதனால் நாட்டுக்கு ஆபத்தான இந்த ஒப்பந்தங்களை மீண்டும் மேற்கொள்வார் என்ற அச்சம் இருக்கின்றது. நாட்டுக்கு ஆபத்தான இவ்வாறான ஒப்பந்தங்களை மேற்கொள்ள ரணில் விக்கிரமசிங்க முயற்சித்தால் அதைத் தடுப்பதற்கு மக்கள் தயாராக வேண்டும் - என்றார். (எ-இ)

# போராட்டம் செய்வோரை கட்டுப்படுத்தவேண்டும்!

## அவர்கள் 'குடு'க்காரர்களாம் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 28

காலிமுகத்திடலில் உள்ள போராட்டக்காரர்களை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும். நகர அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் நான் இதைத் தெரிவிக்கின்றேன். சொத்துக்கள் எரிக்கப்படும் என்ற அச்சத்தில் பலர் வாய் மூடிகளாக இருக்கின்றனர்.

இவ்வாறு அரசாங்கத்தின் பிரதம கொறடாவான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அவசரகாலச் சட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

காலிமுகத்திடல் போராட்டத்தில் தற்போது நிற்பவர்கள் குடுகாரர்கள். அவர்களை அடக்க அவசரகாலச்சட்டம் அவசியம்.

பொறுப்பற்ற மற்றும் சட்டவிரோதமான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக அவர்களை அந்த இடத்தில் இருந்து அகற்றவேண்டும். தனிப்பட்ட சொத்துக்கள் தீயிட்டு அழிக்கப்படும் என்ற அச்சத்தில் இந்த நபர்களுக்கு எதிராகப் பேசுவதற்கு அனைவரும் தயங்குகின்றனர்.

எதிர்ப்பாளர்கள் மற்றும் அவர்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படவேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் நாட்டில் எவரும் வாழ முடியாத நிலைமை ஏற்படும்.

ஜனாதிபதி செயலகத்தை அண்மித்துள்ள போராட்டம் நடத்த ஒதுக்கப்பட்ட இடம் எந்த வகையிலும் பொருத்தமானதல்ல என்பது அண்மைய நிகழ்வுகளால் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த காலிமுகத்திடலில் இருந்து போராட்டக்காரர்கள் அப்புறப்படுத்தப்படவேண்டும். விகாரமாதேவி பூங்காவுக்கு அவர்கள் மாற்றப்படவேண்டும். அமைச்சர் என்ற ரீதியில் இந்த விடயத்தில் கவனம் செலுத்துகின்றேன் - என்றார். (எ-இ)

# கொள்கைகள் அடிப்படையிலேயே சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு

## வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 28

ஜனாதிபதி தலைமையிலான சர்வகட்சி அரசாங்கம் அமைத்தால் அதன் பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையிலேயே அதில் இணைவதா? இல்லையா? என்பதைத் தீர்மானிப்போம். ரணில் விக்கிரமசிங்கவை அந்தப் பதவியில் இருந்து நீக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டிலே நாங்கள் இருக்கின்றோம்.

இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சோஷலிஸ மக்கள் முன்னணி நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய லிபரல் வாதத்துக்கு எதிராக புதிய சோஷலிஸ பொருளாதார கொள்கையை கொண்டுவரவே கோத்தாபய ராஜபக்சவை நாங்கள் ஜனாதிபதி பதவிக்குக் கொண்டு வந்தோம். ஆனால், 20 ஆவது திருத்தம் மூலம், அமெரிக்க பிரஜையான பஸில் ராஜபக்சவை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவந்து, நிதி அமைச்சு வழங்கப்பட்டது. இதன் மூலம் எமது சோஷலிஸ பொருளாதாரக் கொள்கையை முன்னெடுப்பது சாத்தியமில்லை என எமக்குத் தோன்றியது.

லிபரல் வாத கொள்கையின் பிரகாரம் தீர்மானங்களை மேற்கொள்ள பஸில் ராஜபக்ச முன்வைத்த பிரேரணைகளை நாங்கள் அமைச்சரவையில் தொடர்ந்து நிராகரித்து வந்தோம். பின்னர் அமைச்சரவையில் இருந்து பஸில் ராஜபக்சவை நீக்குவதற்கு 10 கட்சிகள் இணைந்த கூட்டணி நடவடிக்கை எடுத்தபோதும் மார்ச் 2 ஆம் திகதி பஸில் ராஜபக்ச எங்களை அமைச்சரவையில் இருந்து வெளியில் போட நடவடிக்கை எடுத்தார். ஆயினும் மக்கள் போராட்டம் காரணமாக பஸில் ராஜபக்ச பதவியில் இருந்து விலகினார். அதன்பின்னர் பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ச பதவி விலகினார். அத்துடன் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண கோத்தாபய ராஜபக்சவுடன் நாங்கள் ஏற்படுத்திக்கொண்ட சர்வகட்சி அரசாங்கம் என்ற எமது உடன்படிக்கையை மீறி அவர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்தார். ஆயினும் ஜனாதிபதி, பிரதமர் இரண்டு பேரும் பதவி விலகவேண்டும் என தொடர்ந்த போராட்டம் காரணமாக ஜனாதிபதி பதவி விலகினார்.

ஆனால், பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க மக்கள் ஆணைக்கு மாறாக ஜனாதிபதியாக பதவி வகிக்கின்றார். அதனால் ரணில் விக்கிரமசிங்கவை மக்கள் பலத்துடன் நீக்கவேண்டும் அந்த நிலைப்பாட்டிலேயே நாங்கள் இருக்கின்றோம். தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அந்த அரசாங்கத்தின் பொருளாதார கொள்கை புதிய லிபரல்வாத கொள்கையாக இருந்தால் அந்த அரசாங்கத்தில் நாங்கள் இணைந்து கொள்ளப் போவதில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது நாட்டை கட்டியெழுப்புவதை விட ஐக்கிய தேசியக் கட்சியை பலப்படுத்தவே செயற்பட்டு வருகின்றார். அதற்காக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை தனது பக்கம் இழுக்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார் - என்றார். (எ-இ)

# அமைச்சு செயலாளர்களின் பெயர்கள் வர்த்தமானியில்

கொழும்பு, ஜூலை 28

28 அமைச்சுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள செயலாளர்களின் பெயர்கள் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

இவர்கள் கடந்த ஜூலை 22ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளனர் என வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# மக்கள் போராட்டத்தில் சில இருண்ட சக்திகள்!

## ரணிலுக்கு சுசில் வாக்காலத்து; புலிகள் மீதும் சந்தேகக்கண்

கொழும்பு, ஜூலை 28

மக்கள் போராட்டத்தின் ஆரம்ப நாள்களில் இளைஞர்களின் நேர்மையான குரல்கள் வெளிப்பட்டன. ஆனால், இப்போது மக்கள் போராட்டத்தின் பின்னணியில் பல்வேறு இருண்ட சக்திகள் செயற்படுகின்றனவா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இவ்வாறு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அவசரகாலச் சட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

74 நாடாளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட சொத்துக்கள் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன. மக்கள் போராட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கின்றோம் என்று கூறிக்கொள்ளும் சில இனந்தெரியாத நபர்கள் பொறுதியில் சொத்துக்கள் கட்டப்பட்டன என்று கூறுகின்றனர். அழிக்கப்பட்ட சொத்துக்களை மீளக் கட்டியெழுப்ப நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நிதி வசதி இல்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்துக்கும் தீ வைக்கப்பட்டது மட்டுமன்றி, புத்த பெருமானின் சிலைகளும் அழிக்கப்பட்டன.

இந்தச் செயல்களின் பின்னணி தொடர்பாக ஆராயப்படவேண்டும். விடுதலைப் புலிகள், அல்லது சர்வதேச சக்திக்களுடன் தொடர்புடையவர்கள் இதில் ஈடுபட்டுள்ளனரா என்பது கண்டறியப்படவேண்டும்.

ஜூலை 13 ஆம் திகதி ரூபாவாஹினி கூட்டுத்தாபன வளாகத்துக்குள் பலவந்தமாக நுழைந்து இடையூறு விளைவித்தவர் நாட்டை விட்டுத் தப்பிச் செல்ல முயன்றபோது விமானத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் காரணங்களால் நாட்டில் அவசரகாலச் சட்டம் தேவைப்படுகின்றது - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த மாதம் எரிபொருள் இறக்குமதிக்கு நிதியில்லை

## மத்திய வங்கி ஆளுநர் கைவிரிப்பு



கொழும்பு, ஜூலை 28

**எரிபொருள் கொள்வனவுக்காக கட்டணம் செலுத்திய கப்பல்களே தற்போது நாட்டை வந்தடைகின்றன. எதிர்வரும் மாதத்துக்கான எரிபொருள் கொள்வனவு நிச்சயமற்றதாக உள்ளது. சீனா, இந்தியாவிடமிருந்து சாதகமாக பதில் இதுவரை கிடைக்கவில்லை.**

இவ்வாறு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டால் மாத்திரமே ஏனைய நாடுகள் நம்பிக்கையுடன் ஒத்துழைப்பு வழங்கும். இந்தியா மாத்திரமே நெருக்கடியான சூழ்நிலையில் கடனுதவி திட்டத்தின் ஊடாக நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியுள்ளது.

நாட்டின் உள்ளக அரசியல் மற்றும் சமூக நெருக்கடிகள் பொருளாதார மீட்சிக்கான திட்டங்களை முழுமையாக தாமதப்படுத்தியுள்ளன. அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாவிட்டால் பொருளாதார நெருக்கடி ஒப்பிட முடியாத அளவுக்கு தீவிரமடையும் என்பதை சகலரும் பொறுப்புடன் விளங்கிக்கொள்ள வேண்டும்.

மத்திய வங்கியின் ஆளுநராக கடந்த ஏப்ரல் மாதம் நியமிக்கப்பட்டேன். அன்றிலிருந்து, இதுவரை இரண்டு அரசாங்கங்கள் மாறியுள்ளன. இவ்வாறான ஸ்திரமற்ற தன்மை எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையாது.

அரசியல் நெருக்கடி தீவிரமடைந்தால் பொருளாதார நெருக்கடி மேலும் பாரதூரமானதாக மாறும். அரசியல் ஸ்திரமான முறையில் காணப்பட்டிருந்தால் பல பிரச்சினைகளுக்கு முன்னேற்றகரமான தீர்வுகளை எட்டியிருக்கலாம். அரசியல் நெருக்கடியால் ஏற்பட்ட காலதாமதம் பல திட்டங்களை தாமதப்படுத்தியது. சர்வதேச நாடுகள் மற்றும் நிறுவனங்கள் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பாக ஆராயும் போது அவர்கள் அரசியல் ஸ்திரத்தன்மையை முதன்மைப்படுத்துகின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்துடனா ஊழியர் மட்ட ஒத்துழைப்பை எதிர்வரும் மாதம் பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கிறேன். அதற்கான நிலையான மற்றும் அமைதியான சூழலை அரசாங்கம் உருவாக்க வேண்டும். நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டால் மாத்திரமே ஏனைய நிதி பெறல் தொடர்பாக அவதானம் செலுத்தமுடியும்.

கடன் பெறுவது தவறல்ல. ஆயினும் பெற்றுக்கொண்ட கடனால் அதிக வருமானத்தை ஈட்டிக்கொள்ளவேண்டும். ஜப்பானிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன்களால் நாடு அதிக பயனை பெற்றுக்கொண்டுள்ளதை உறுதியாக குறிப்பிடமுடியும். பதவியேற்கும் போது வெளிநாட்டு கையிருப்புகளில் பாவிக்க கூடிய பெறுமானங்கள் மிகவும் குறைவான மட்டத்தில் காணப்பட்டன.

இந்திய கடனுதவித் திட்டத்தினால் பல பிரச்சினைகளுக்கு ஒப்பீட்டளவில் தீர்வு காண முடிந்துள்ளது. கடனுதவி திட்டத்தை தொடர்ந்து வழங்கவேண்டும் என்று இந்தியாவிடம் கோரியுள்ளோம். சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை முழுமையாக பெற்றுக்கொண்டால் மாத்திரமே சர்வதேசநாடுகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள முடியும்.

கைவசமுள்ள பாவிக்கக் கூடிய கையிருப்பு வரையறுக்கப்பட்டதாக உள்ளது. தற்போது இறக்குமதி செய்யப்படும் எரிபொருளை எதிர்வரும் மாதத்தின் முதல் வாரம் வரை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகிக்க முடியும். இருப்பினும் அதற்கு பின்னர் எரிபொருள் கொள்வனவு நிச்சயமற்றதாகவே உள்ளது - என்றார்.

(எ-இ)

## நாட்டை வந்தடைந்தது மற்றொரு எரிவாயுக் கப்பல்

கொழும்பு, ஜூலை 28

மேலுமொரு எரிவாயுக் கப்பல் நேற்று நாட்டை வந்தடைந்துள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன் நேற்று ஒரு லட்சத்து 40 ஆயிரம் சமையல் எரிவாயு சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது என நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார். இதேவேளை கடந்த 24ஆம் திகதி 3ஆயிரத்து 750 மெற்றிக் தொன் எரிவாயு அடங்கிய 6ஆவது கப்பல் நாட்டை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## சந்தைக்குள் நுழையும் கால்நடைகள் பிடிக்கப்படும்

***சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் அறிவிப்பு***


சாவகச்சேரி பொதுச்சந்தையில் கட்டாக்காலியாகக் காணப்படும் கால்நடைகள் பிடிக்கப்படவுள்ளன என்று சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார்.

மரக்கறிகள் மற்றும் பழவகைகள் என்பன வற்றின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில், சந்தைக்குள் கட்டாக்காலியாக உலாவும் கால்நடைகள், சந்தையிலுள்ள மரக்கறிகள், பழவகைகள் போன்றவற்றுக்கு சேதங்களை விளைவித்து வருகின்றன என்று சந்தை வியாபாரிகள் முறைப்பாடு தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் கால்நடைகளை வளர்ப்போர் தமது கால்நடைகளை சந்தைக்குள் வரவிடாமல் கட்டி வளர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறில்லையெனில் சந்தைக்குள் நுழையும் கால்நடைகள் பிடிக்கப்பட்டு, வியாபாரிகளுக்கு ஏற்படும் நட்டம், பிடிகூலி, பராமரிப்புச் செலவுகள் ஆகியவற்றுடன் தண்டமும் விதிக்கப்படும் என்று தவிசாளர் மேலும் அறிவித்துள்ளார். (ஓ-14,9)

### நாடாளுமன்ற உறுப்பினராக

## வஜிர அபேவர்த்தன சத்தியப் பிரமாணம்



கொழும்பு, ஜூலை 28

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன நாடாளுமன்ற உறுப்பினராக நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. இதன்போதே அவர் முன்னிலையில் வஜிர அபேவர்த்தன நாடாளுமன்ற உறுப்பினராக உறுதிமொழி எடுத்துக் கொண்டார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் ஏற்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்துக்கே வஜிர அபேவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார். (ச-இ)

## அவசர கடவுச்சீட்டு பெற விசேட ஒரு நாள் சேவை

### குடியகல்வுத் திணைக்களம் அறிவிப்பு

அவசரமாக கடவுச்சீட்டுபெறும் தேவைப்பாடு உடையவர்களுக்கு விசேட ஒரு நாள் சேவை வழங்கப்படும் என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்தகையவர்கள் வட்ஸ்அப் மூலம் தங்கள் ஆவணங்களை 070 6311711 என்ற எண்ணுக்கு அனுப்புவதன் மூலம் சேவைக்கான அனுமதியை பெற்றுக்கொள்ளலாம். அதேவேளை முன்கூட்டியே பதிவை மேற்கொள்பவர்களுக்கு மட்டுமே கடவுச்சீட்டு வழங்கப்படும் என்று திணைக்களம் முன்னதாக அறிவித்துள்ளது.

அத்துடன் விண்ணப்பதாரிகள் www.immigration.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக தங்களது காலம் மற்றும் திகதியை முன்பதிவு செய்து சேவைகளைப் பெறலாம் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

### யாழ். பல்கலை மாணவர் மீதான

## பகிடிவதை நிரூபிக்கப்பட்டால் இரு ஆண்டுகள் வகுப்புத்தடை

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் பகிடிவதைக் குற்றச்சாட்டுக்குள்ளான மாணவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின்படி 2 ஆண்டுகளுக்குக் குறையாத வகுப்புத் தடை விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் புதுமுக மாணவர்கள் ஒன்றுகூடல் என்னும் பெயரில் தெல்லிப்பழைக்கு அழைக்கப்பட்டு பகிடிவதைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜுக்கு முறைப்பாடு கிடைத்ததை அடுத்து, அது தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதையடுத்து சட்ட நிறைவேற்று அதிகாரி, மாணவர் ஆலோசகர் மற்றும் மாணவர் ஒழுக்காற்று அதிகாரி ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று புதுமுக மாணவர்களை சிரேஷ்ட மாணவர்களிடம் இருந்து மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்துவதற்கு ஏதுவாக சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் சிரேஷ்ட மாணவர்கள் 18 பேருக்குத் தற்காலிக வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு, புதுமுக மாணவர்களிடம் வாக்குமூலம் பெறும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பூர்வாங்க விசாரணைகளின் அடிப்படையில் குற்றவாளிகளாக இனங்காணப்படும் மாணவர்களுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும். குற்றவாளிகளாக இனங்காணப்படும் மாணவர்களுக்கு 2 ஆண்டுகளுக்குக் குறையாத வகுப்புத் தடை விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச செயலகங்கள் ஆக்கிரமிப்பு; சி.ஐ.டி.யால் 150 பேர் கண்டறிவு

**கொழும்பு, ஜூலை 28**

**ஜனாதிபதி மாளிகை, அலரிமாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகம் ஆகியவற்றுள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் 150 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என பொலிஸ் தலைமையக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.**

குற்றவியல் விசாரணைத் திணைக்களம் தலைமையிலான விசாரணைக் குழுக்களால் சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் தினங்களில் அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அவர்களில் ஜனாதிபதி செயலகத்தை உடைத்து சேதப்படுத்திய 55 சந்தேநபர்களும் பிரதமர் அலுவலகத்தை சேதப்படுத்திய 15 சந்தேகநபர்களும் உள்ளடங்குகின்றனர்.

அத்துடன் ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரி மாளிகை என்பவற்றுக்கு சேதம் விளைவித்தமை மற்றும் அங்கிருந்த சொத்துக்களைத் திருடிய குற்றச்சாட்டில் 80 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

## ராஜிதவின் கப்பல் மோசடி; வழக்கு மீளப்பெறப்பட்டது



கொழும்பு, ஜூலை 28

நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனரத்னவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட மோசடி வழக்கு மீளப்பெறுவதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது என கொழும்பு மேலதிக நீதிவான் கேமிந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

குற்றவியல் விசாரணைக்கான வழக்குக் கோவை நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜித சேனரத்ன மீன்பிடி அமைச்சராக இருந்தபோது அவரது செயலாளர் ஒருவரின் பெயரில் சீனாவிலிருந்து 8 கப்பல்களை தருவித்தமை மற்றும் கறுப்புப் பட்டியலில் உள்ள நிறுவனம் ஒன்றுக்கு கொழும்பு முகத்துவாரம் மீன்பிடித்துறைமுகத்தை குத்தகைக்கு வழங்கியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருந்தன.

இதுதொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் முறைப்பாட்டின் அடிப்படையில் குற்றப்புலனாய்வு பொலிஸார் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தனர்.

ஆயினும் குறித்த வழக்கு இலஞ்ச, ஊழல் தடுப்பு சட்டப்பிரிவின் கீழ் விசாரணைக்கு எடுக்கப்பட்டதால் இந்த வழக்கை மீளப்பெறுவதாக குற்றப்புலனாய்வு பொலிஸார் நீதிமன்றத்தில் அனுமதி கோரினர்.

அதற்கமைய முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிரான மோசடி வழக்கு மீளப்பெறப்பட்டுள்ளது என கொழும்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி கேமிந்த பெரேரா அறிவித்துள்ளார். (ச-இ)

*நயினாதீவு பிரதேச மருத்துவமனையில்*

## சிகிச்சை வழங்காததால் குடும்பஸ்தர் உயிரிழப்பு?

*குடும்பத்தினர் குற்றச்சாட்டு விசாரணைகள் ஆரம்பம்*

யாழ்ப்பாணம், ஜூலை 28

தலையில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவருக்கு நயினாதீவு பிரதேச மருத்துவமனையில் உரிய சிகிச்சைகள் வழங்கப்படவில்லை என்றும், அதனால் குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார் என்றும் குடும்பத்தினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணியளவில் நடந்துள்ளது. நயினாதீவு, முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த சிற்றம்பலம் செல்வக்குமார் (வயது-42) என்பவரே உயிரிழந்துள்ளார். இவர் இருபிள்ளைகளின் தந்தையாவார்.

நயினாதீவு இறங்குதுறையில் மாலை 6.30 மணியளவில் சென்றடைந்த பயணிகள் படகில் இருந்து இறங்கிய குடும்பஸ்தர், லாண்ட் மாஸ்ரரில் வீடு சென்றுள்ளார். ஆலயத்துக்கு முன்பாக உள்ள வீதி வளைவில் லாண்ட் மாஸ்டர் திரும்பியபோது, குடும்பஸ்தர் தவறி வீழ்ந்து தலையில் படுகாயமடைந்தார்.

அவரை உடனடியாக நயினாதீவு பிரதேச மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோது, அங்கிருந்தவர்கள் அவரை மருத்துவமனையில் சேர்க்க மறுத்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. குடும்பஸ்தரை வீட்டுக்கு அழைத்துச் சென்று சுத்தம் செய்துவிட்டு அழைத்து வருமாறு அங்கிருந்தவர்கள் கூறினர் என உறவினர்கள் தெரிவித்தனர். அதனால் ஏற்பட்ட காலதாமதமே குடும்பஸ்தர் உயிரிழக்கக் காரணம் என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அதேவேளை, மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட நபர் மதுபோதையில் இருந்தார் என்றும், அதனால் அவருக்குச் சிகிச்சையளிக்க முடியாது போனது என்றும் மருத்துவமனைத் தரப்புத் தெரிவித்தது.

"சம்பவம் நடைபெற்ற தினத்தில் நான் கடமையில் இருக்கவில்லை. மருத்துவ விடுப்பில் இருந்தேன். இந்தச் சம்ப வத்துடன் மருத்துவர் எவரும் தொடர்புபடவில்லை. சம்பவம் நடைபெற்றபோது மருத்துவரின் கீழ் உள்ள உத்தியோகத்தர்களும், ஊழியர்களுமே இருந்துள்ளனர்" என்று நயினாதீவு பிரதேச மருத்துவமனைப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

ஆயினும் அந்தச் சமயத்தில் மருத்துவர் ஒருவர் பணியில் இருந்தார் என்று கூறப்படுகின்றது. இந்த விடயங்கள் தொடர்பாக ஆராய விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. விசாரணைகளின் பின்னரே விவரங்கள் தெரியவரும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

லாண்ட் மாஸ்டரில் இருந்து கீழே விழுந்ததில் நெஞ்சு மற்றும் வயிற்றுப்பகுதியில் பாதிக்கப்பட்டு அதிக குருதிப் பெருக்கு ஏற்பட்டமையே உயிரிழப்புக்குக் காரணம் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி மயூரன் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் உத்தரவுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும், ஊர்காவற்றுறைப் பொலிஸாரும் இது தொடர்பில் விசாரணகளை ஆரம்பித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-125)

## குடும்பஸ்தரின் உயிரிழப்பு உரிய விசாரணை அவசியம்

*இளைஞர் மன்றம் வலியுறுத்து*

கொழும்பு, ஜூலை 28

நயினாதீவு பிரதேச மருத்துவமனை ஊழியர்களின் அசமந்தப் போக்கால் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்துக்கு கடும் கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், உரிய விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

இவ்வாறு நயினாதீவு தெற்கு இந்து இளைஞர் மன்றம் தெரிவித்துள்ளது.

அந்த மன்றம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது:-

மருத்துவமனை ஊழியர்களின் அசமந்தப் போக்கால் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீது உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்த துறைசார்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பல ஆண்டுகளாக இடமாற்றம் இன்றி மருத்துவமனையில் கடமையாற்றும் ஊழியர்களை இடமாற்றம் செய்வதுடன், மருத்துவமனைக்குத் தமிழ் மொழி பேசும் மருத்துவர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (எ-இ)

## காத்திருப்போர் பட்டியலில் உள்ளோருக்கு கொடுப்பனவு

சாவகச்சேரி, ஜூலை 28

தென்மராட்சிப் பிரதேசத்தில் காத்திருப்போர் பட்டியலில் உள்ள முதியோர் மற்றும் சிறப்புத்தேவையுடையோருக்கு சமுர்த்தி வங்கிகளில் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே பிரதேச சமுர்த்திப் பயனாளிகள், சமுர்த்திக்கான காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்கள், முதியோர், சிறப்புத்தேவையுடையோர் ஆகியோருக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வரும் நிலையில் காத்திருப்போர் பட்டியலில் உள்ள முதியோர் மற்றும் சிறப்புத்தேவையுடையோருக்கு ஜூலை மாதத்துக்குரிய கொடுப்பனவுகள் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டு வருகின்றது. (ஒ-14,9)

## முக்கொம்பன் வித்தியாலயத்தில் இரண்டு மாடிக் கட்டடம் திறப்பு




கிளிநொச்சி, ஜூலை 28

கிளிநொச்சிமுக்கொம்பன் மகா வித்தி யாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

கொரிய அரசாங்கத்தின் நிதியுதவியில் கொய்கா திட்டத்தின் மூலம், வகுப்பறை, ஆய்வுகூடம், நூலகம் உள்ளடங்கலாக அனைத்து வசதிகளையும் கொண்ட கட்டடம் பாடசாலைக்கு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

கட்டடத்தின் பெயர்ப்பலகையை வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மற்றும் இலங்கைக்கான கொரியத்தூதுவர் சந்துஷ் வூன்ஜின் ஜியோங் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். (ஒ-14,214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தொடருமா எரிபொருள் நெருக்கடி?

**நா**ட்டில் தலைவிரித்தாடிய பெற்றோல், டீசல் தட்டுப்பாடு தற்போது சிறிதளவு தணிந்திருக்கின்றது. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசைகள் குறையாவிட்டாலும், எரிபொருளை ஓரளவுக்குப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. வீதிகளை வாகனங்கள் மீண்டும் மெல்ல ஆக்கிரமிக்கத் தொடங்கியிருக்கின்றன.

நிலைமை ஓரளவு சீராகிக் கொண்டிருக்கின்றது என்று ஆசுவாசப் பெருமூச்சுவிடுகையில், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசேகர வெடிகுண்டொன்றை வீசியிருக்கின்றார். நெருக்கடிகள் மறைக்கப்பட்டுள்ளனவே தவிர, தீர்ந்துவிடவில்லை என்று சுட்டிக்காட்டியிருக்கின்றார். அரசாங்கத்துக்கு எதிரான மக்களின் எதிர்ப்பை முறியடிப்பதற்காக அவசர அவசரமாக மேற்கொண்ட திசைதிருப்பல்தான் இப்போதைய எரிபொருள் வழங்கல் சீராக்கலே தவிர, நாட்டின் நெருக்கடியை உணர்ந்து அதைத் தணிப்பதற்காக எடுக்கப்பட்டிருக்கும் உளமார்ந்த செயற்பாடு அல்ல. இதனையே மத்திய வங்கி ஆளுநரின் கூற்றும் மறைமுகமாகச் சொல்லி நிற்கின்றது.

முற்பணம் கொடுக்கப்பட்ட எரிபொருள் இறக்குமதியே இப்போது நடந்து கொண்டிருக்கின்றது என்று கூறியிருக்கும் நந்தலால் வீரசேகர, எதிர்வரும் முதலாம் திகதிக்குப் பின்னர் எரிபொருள் இறக்குமதிக்கு நிதியில்லை என்று கைவிரித்திருக்கிறார். இதனால் மீண்டும் நாடு எரிபொருள் தட்டுப்பாட்டால் அறிவிக்கப்படாத முடக்கத்துக்குச் செல்லுமா என்ற அச்சம் ஏற்பட்டிருக்கின்றது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாட்டின் அரசியல் உறுதித்தன்மை பெரும் சவாலாக மாறியிருக்கின்றது. மத்திய வங்கியின் ஆளுநரும் இதைச்சுட்டிக்காட்டியிருப்பதுடன், தான் பதவிக்கு வந்தபின்னர் இரு அரசாங்கங்கள் மாறியிருக்கின்றமையை நினைத்தும் சலித்திருக்கின்றார்.

இலங்கை மத்திய வங்கி ஆளுநருக்கு இருக்கும் நாட்டின் எதிர்காலம் பற்றிய சிந்தனை, அதிகாரத்தில் இருக்கும் அரசியல்வாதிகளுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறு இருந்திருந்தால், இலங்கை மத்திய வங்கி ஆளுநர் எதிர்பார்க்கும் நாட்டின் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கான வழியைக் காட்டும் அரசியல் ஸ்திரத்தன்மை எப்போதோ ஏற்பட்டிருக்கும்.


சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் சரியான நேரத்தில் கிடைக்காவிட்டால், நாட்டின் நிலைமை கற்பனைக்கு எட்டாத வகையில் மோசமாகும். சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் இலங்கைக்குக் கிடைத்தால் மட்டுமே, நம்பிக்கை கொண்டு ஏனைய நாடுகள் கைகொடுக்கும் என்ற நிலைமையில், இவற்றுக்கெல்லாம் தடையாக இருப்பது நாட்டில் நடக்கும் அதிகாரப் போட்டியே.

ராஜபக்சக்களும், அவர்களின் அரசாங்கமும் பதவி விலகி இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைத்து முன்னகர வேண்டும் என்ற நாட்டு மக்களின் கோரிக்கையைப் புறந்தள்ளி, இப்போது ரணில் விக்கிரமசிங்க நாட்டின் அதி உச்சப் பதவியைக் கைப்பற்றியிருக்கின்றார். அது மட்டுமன்றி மக்கள் யாரை வெறுத்து வெளியேற வலியுறுத்தினரோ அந்தத் தரப்பின் ஒத்தாசையுடன் மக்கள் எதிர்ப்பை அடக்குவதற்கான காய்நகர்த்தலை முன்னெடுக்கின்றார்.

மக்களின் எதிர்பார்ப்பைப் புறந்தள்ளி, அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டிருக்கும் வரையில் நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படப்போவதில்லை. சர்வதேசமும் மக்கள் எதிர்ப்புடைய அரசாங்கத்தின் மீது நம்பிக்கை கொண்டு செயலாற்றப் போவதில்லை. நாட்டில் நடக்கும் அரசியல் சதிராட்டம் தீர்க்கப்படாவிட்டால் மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படாவிட்டால் நாட்டின் எதிர்காலம் மீளமுடியாத இருளில் மூழ்கிவிடலாம். அதன் பலாபலன்களை சாதாரண மக்களே அனுபவிக்கவிருக்கின்றனர். இப்போது கற்றுக்கொள்ளும் பாடங்களில் இருந்து – கண்டுகொண்டிருக்கும் காட்சிகளைக் கொண்டு – மக்களின் மனவோட்டத்தில் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே இந்த நாட்டுக்கு விடிவு கிட்டும். இல்லாவிடில் இந்த நெருக்கடி சந்ததி சந்ததியாகத் தொடரும் என்பதே உண்மை.

நாளொரு நல்வார்த்தை

''கஷ்டங்கள், நஷ்டங்கள் அடைந்தபின் மனிதர் அதிக அடக்கத்தையும் அறிவையும் பெறுகின்றனர்'' -**பிராங்கிளின்**




# கோத்தாபய ராஜபக்ச சிங்கப்பூரில் தங்குவார்

*அந்த நாட்டு ஊடகம் தகவல்*

**கொழும்பு, ஜூலை 28**

**சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தொடர்ந்தும் சிங்கப்பூரிலேயே தங்கியிருப்பார் என்று அந்த நாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

கோத்தாபய ராஜபக்ச இலங்கைக்கு திரும்பி வரவுள்ளார் என அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ள நிலையிலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

14ஆம் திகதி சவூதி விமானத்தில் மாலைதீவிலிருந்து சங்கி விமான நிலையத்துக்கு கோத்தாபய வந்தவேளை அவருக்கு 14 நாள் நுழைவிசைவு வழங்கப்பட்டிருந்தது. அவருக்கு வழங்கப்பட்ட குறுகியகால அனுமதியை சிங்கப்பூர் மேலும் நீடித்துள்ளது எனத் தெரியவந்துள்ளது.

கோத்தாபய ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டுள்ள புதிய நுழைவிசைவு 11ஆம் திகதி முடிவடையும் எனத் தெரியவருகின்றது. ராஜபக்ச ஆரம்பத்தில் சிட்டிசென்டரில் உள்ள விடுதியில் தங்கியிருந்தார். தற்போது தனியார் வீடொன்றில் தங்கியுள்ளார் என தெரியவருகின்றது. சிங்கப்பூருக்கு வந்தது முதல் அவர் வெளியில் நடமாடவில்லை- என்றுள்ளது.

(எ-இ)

# ரணிலின் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கவேண்டும்

*சர்வதேச ஜனநாயக ஒன்றியம் கோரிக்கை*

கொழும்பு, ஜூலை 28

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றிடமிருந்து தேவையான நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்க சர்வதேசம் முன்வர வேண்டும் என சர்வதேச ஜனநாயக ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கோத்தாபய ராஜபக்ச ஆட்சி காலத்தில் ராஜபக்ச குடும்பத்தின் தவறான நிர்வாகமும் ஊழலும் நாட்டை வீழ்ச்சியடைய செய்துள்ளது.

நாட்டுக்குச் சிறந்த தலைமைத்துவத்தை வழங்கக்கூடிய அனுபவமிக்க அரசியல்வாதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவார். 6 தடவைகள் இலங்கையின் பிரதமராக இருந்த அவர், தனது நல்லாட்சிக்கு சர்வதேசத்தின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற்றுள்ளதுடன், மக்களின் நலனுக்காக அரசியல் நெருக்கடிகளைத் தீர்க்கமுடியும் என்பதை நிரூபித்துக் காட்டியும் உள்ளார்.

அதனால் நாட்டை நெருக்கடியிலிருந்து விடுவிப்பதற்கும் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றிடமிருந்து தேவையான நிதி உதவிகளைப் பெறுவதற்கும் இலங்கை ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க எடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று அனைத்து சர்வதேச நண்பர்கள் மற்றும் பங்காளிகளுக்கும் அழைப்பு விடுக்கிறோம் - என்றுள்ளது. (எ-இ)

நாளை 29.07.2022 வெள்ளிக்கிழமை ஆடி 13

சுபநேரம் : 06.03 - 07.33
ராகுகாலம்: 10.33 - 12.03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சீரான எரிபொருள் விநியோகத்துக்கு முன்னுதாரணமாக நுணாவில் ஐ.ஓ.சி.

பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கின்ற எரிபொருள் வரிசைகள். இந்த எரிபொருள் வரிசையைக் குறைக்க, எத்தனையோ உத்திகளை அரசாங்கமும், அரச அதிகாரிகளும் நடைமுறைப்படுத்தியபோதும் வரிசைகள் இன்னும் நீள்கின்றனவே தவிர, குறைவதாகத் தெரிவதில்லை. ஆனாலும், பொருத்தமான நடைமுறைகளைப் பின்பற்றினால் இந்த வரிசை யுகத்தை இல்லாதாக்கமுடியும் என்பதை நுணாவில் ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையத்தில் கண்கூடாகக் காணமுடிகின்றது. எப்போது பார்த்தாலும், ஏதோ அட்சய பாத்திரம்போல அங்கே எரிபொருள் வழங்கப்பட்டுக்கொண்டிருந்தாலும், வரிசை என்பது மிகச் சிறியதாகவே இருக்கின்றது. காத்திருப்பில்லை, நேர விரயமில்லை. வந்தனர், பெற்றனர், சென்றனர் என்ற ரீதியிலேயே அநேகரும் அங்கே எரிபொருளைப் பெற்றுச் செல்கின்றனர். ஏனைய எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எல்லாம் வரிசைகளால் திணறுகையில், இங்கு மட்டும் எப்படி துரிதமான, சகலருக்குமான எரிபொருள் விநியோகம் சாத்தியம்? அதனை அறிய அங்கு எரிபொருள் நிரப்பிச் செல்லும் மக்களைச் சந்தித்தோம். நாங்கள் சென்றபோது, மதகுருமாருக்கும், ஊனமுற்றவர்களுக்கும் மாத்திரமே எரிபொருள் விநியோகம் இடம்பெற்றுக்கொண்டிருந்தது.

## பெற்றோல் இல்லாட்டி நாங்கள் முடம்

'எல்லா இடத்திலையும் பெற்றோல் கியூ நிக்குது. ஆனால், அங்கையெல்லாம் எங்களை மாதிரி மாற்றுத்திறனாளிகளுக்கு தனி வரிசை இல்லை. மற்றவையோட சேர்ந்துதான் நாங்களும் நிக்க வேணும். உண்மையில எங்களுக்குத் தான் எரிபொருள் அவசியம். ஏனெண்டால் மற்றவை மோட்டார்சைக்கிள் இல்லாட்டியும் சைக்கிள், பஸ் எண்டு ஏதோ ஒரு வாகனத்தில போகக்கூடியதாக இருக்கும். இல்லாட்டி நடந்தெண்டாலும் போகலாம். நாங்கள் அப்பிடி இல்லையே. எங்க போனாலும் இந்த மூண்டு சில்லு மோட்டார் சைக்கிளிலதான் போகவேணும். பெற்றோல் இல்லாட்டி நாங்கள் உண்மையாகவே முடமாகித்தான் இருக்கவேணும். இப்பிடியான நிலையில எங்கட கஷ்டத்தை உணர்ந்து, எங்களுக்கு தனியா நேரம் ஒதுக்கி, முன்னுரிமை அடிப்படையில எங்களுக்கு பெற்றோல் தரவேணும் எண்டு நினைச்சதே பெரிய விசயம். பெரிய பெரிய அதிகாரிமாருக்குக்கூட இப்பிடியான எண்ணம் வரேலை. ஆனால் நுணாவில் பெற்றோல்செற்காரர் தாங்களா நினைச்சு செய்யிற இந்தப் புண்ணியத்தை கடைசி மட்டும் நாங்கள் மறக்கமாட்டம்' என்று சொல்கிறார் நல்லூரைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி ஒருவர்.

அவர் தனது மூன்று சில்லு மோட்டார் சைக்கிளில் வாழைக்குலைகளை கடைகளுக்கு விநியோகிக்கும் தொழில் செய்பவர். அண்மைக்கால எரிபொருள் நெருக்கடியால், அவரால் இயங்க முடியாமல் போய்விட, வாழ்வாதாரமும் கேள்விக்குறியாகி இருந்தது. ஏனெனில் அவரால் மணித்தியாலக்கணக்கில் வரிசையில் காத்திருந்து எரிபொருளப் பெற்றுக்கொள்ள அவரது உடல்நிலை ஒத்துழைக்காது. இப்போது நுணாவில் ஐ.ஓ.சி.யில் அவருக்கு வந்தவுடனேயே எரிபொருள் கிடைத்ததால், இனி அவரது வாழ்வாதாரம் மீண்டும் உயிர்க்கும்.

## மதகுருமாருக்கு மரியாதை

'சிங்கள இடத்தில ஒரு பிக்கு போனால், அவைக்குத்தான் எல்லாத்துக்கும் முன்னுரிமை. ஆனால் இஞ்ச அப்பிடியில்லை. கோயில் பூசைகளை எல்லாம் விட்டிட்டு நாள்கணக்கில எப்பிடி எங்களால வரிசையில நிற்க முடியும்? கோயிலில நேரம் தவறாமல் பூசை செய்யிறதெண்டால் வரிசையில நிற்க முடியாது. கடவுளில பாரத்தைப் போட்டிட்டு சைக்கிளிலதான் போய் வந்தம். ஆனால், தூர இடங்களில உள்ள கோயில்களுக்கு நேரத்துக்கு போகமுடியாது. நாங்கள் இப்பிடி கஷ்டப்படுறதைப் பார்த்தோ என்னவோ கடவுள் கண்ணைத் திறந்திட்டார்போல. அதாலதான் இண்டைக்கு இஞ்ச (நுணாவில் ஐ.ஓ.சி.) எங்களுக்கெண்டு தனி மரியாதை தந்து, தனி வரிசையில, மினக்கேடு இல்லாமல் எல்லாருக்கும் பெற்றோல் அடிச்சிருக்கினம். இப்பிடி எல்லா செற் காரரும் நடந்தால், சனங்கள் நாள் கணக்கில வரிசையில நிக்கத் தேவையில்லையே' என்று சொல்லிவிட்டு, கோயில் பூசைக்காக விரைந்தார் ஒரு அந்தணர்.

இப்படி மதகுருமார், மாற்றுத்திறனாளிகள் என்போருக்கு மாத்திரமல்லாது அரச ஊழியர்கள், விவசாயிகள், தனியார் துறையினர், ஆசிரியர்கள் எனச் சகலருக்கும் அவரவர்கென தனியான நேரத்தை ஒதுக்கீடு செய்து, அதனை இம்மியும் பிசகாது நடைமுறைப்படுத்தி, இந்த நெருக்கடி காலத்திலும் ஒரு முன்னுதாரணமான எரிபொருள் நிரப்பு நிலையமாக நுணாவில் ஐ.ஓ.சி. நிரப்பு நிலையம் மக்களிடையே நன்மதிப்பை பெறத் தொடங்கியுள்ளது. அந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தைப் போல ஏனைய எரிபொருள் நிரப்பு நிலையங்களும் நடந்தால் மக்களின் துயர் குறையுமே!



# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** நினைத்ததை நிறைவேற்றி மகிழ்வீர்கள். எதிர்பார்த்த வருவாய் வந்து சேரும். நண்பர்கள் ஒத்துழைப்புடன் உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். வருவாய் அதிகரிக்கும்.

**இடபம்:** கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். வியாபாரத்தில் திருப்பம் உண்டாகும். எதிர்பாராத லாபம் ஏற்படும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் இழுபறியாகும். செயல்களில் தடுமாற்றம் உண்டாகும். உங்கள் எதிர்பார்ப்புகள் தள்ளிப் போகும். மனதில் குழப்பம் ஏற்படும். பணியில் கவனம் தேவை.

**கடகம்:** உறவினர்களால் சில சங்கடங்களுக்கு ஆளாவீர்கள். செலவு அதிகரிக்கும். கணவன் மனைவிக்குள் பிரச்சினைகள் தோன்றும். வார்த்தைகளில் கவனம் தேவை.

**சிம்மம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும் உங்கள் விருப்பம் ஒன்று நிறைவேறும். தடைபட்ட செயல்கள் நிறைவேறும். நிலுவைப் பணம் வந்து சேரும்.

**கன்னி:** வியாபாரத்தில் உங்கள் அணுகுமுறை வெற்றி தரும். லாபம் அதிகரிக்கும். பணிபுரியும் இடத்தில் உங்கள் ஆலோசனையை ஏற்பார்கள். முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

**துலாம்:** உங்கள் அணுகுமுறையால் நீண்டநாள் பிரச்சினையில் தீர்வு உண்டாகும். குடும்பத்தில் ஏற்பட்ட நெருக்கடிகள் விலகும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். சக ஊழியர்கள் உதவுவர்.

**விருச்சிகம்:** பழைய பிரச்சினை ஒன்று மீண்டும் தலையெடுக்கும். குழப்பம் தோன்றும். எதிர்பார்த்த ஒன்று இழுபறியாகும். வீண் அலைச்சல், செலவு உண்டாகும். பயணத்தில் கவனம் தேவை.

**தனுசு:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். நீண்டநாள் எண்ணம் நிறைவேறும். நண்பரால் ஆதாயம் காண்பீர்கள். குடும்பத் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** வியாபாரத்தில் நெருக்கடி விலகும். மறைமுகத் தொல்லை அகலும். வழக்கு உங்களுக்கு சாதகமாகும். விரோதிகள் விலகிச் செல்வார்கள். அதிகாரியின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:** பிள்ளைகளின் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். பொன் பொருள் சேரும். உறவினர்களால் ஏற்பட்ட தொல்லை விலகும். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

**மீனம்:** எதிர்பார்ப்பு நிறைவேறும். விரும்பிய ஒன்றை போராடி அடைவீர்கள். பணியிடத்தில் சில சங்கடங்களை சந்திப்பீர்கள். அமைதி காப்பது நல்லது. பிரச்சினைகளுக்கு முடிவு காண்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சர்வகட்சி அரசு தொடர்பில் இதுவரை அழைப்பு இல்லை

## மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு ஜூலை 28 தேசிய அரசு அல்லது சர்வகட்சி அரசு அமைப்பது தொடர்பில், அரசிடமிருந்து எமக்கு இதுவரை அதிகாரபூர்வ அழைப்பு எதுவும் வரவில்லை. ஏனைய எதிர்கட்சிகளுக்கும் அதிகார பூர்வ அழைப்புகள் வரவில்லை. ஆகவே, அதற்குள் "பேச்சுகள் நடக்கின்றன; அமைச்சர்கள் ஆகிறார்கள்" என்பவையெல்லாம் வெறும் சுவாரசிய செய்திகளாக மட்டுமே இருக்கின்றன. ஆனால், நாடு இன்று இருக்கும் அவதி நிலையில், ரணில் விக்கிரமசிங்க அரசுக்கு நாட்டை இயல்புநிலைக்குக் கொண்டுவர அவகாசம் கொடுக்கவேண்டும். அவசரப்பட்டு எதிர்ப்பு அரசியல் ஆர்ப்பாட்டங்களைச் செய்யக்கூடாது.

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோகணேசன் எம்.பி. ஊட கங்களுக்கு நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய அரசு அல்லது சர்வகட்சி அரசு அமைப்பது தொடர்பில் அதிகாரபூர்வ அழைப்பு வரவில்லை. ஆனால், கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது, ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க என்னிடமும், ஏனைய கட்சித் தலைவர்களிடமும் நேரடியாக இது பற்றிக் கூறினார். ஆனால், கட்சிகளுக்கு சர்வகட்சி அரசு அமைப்பது தொடர்பில், அரசிடமிருந்து அதிகாரபூர்வ அழைப்பு வரவேண்டும்.

அதன் பிறகு நாம் எமது கட்சிகள் மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி அரசியல் குழுக்கள் மத்தியில் இதுபற்றிப் பேசுவோம். அதே போல் ஐக்கிய மக்கள் கூட்டணி தலைமைக் குழுவிலும் பேசுவோம்.

இதுதான் ஒரு பொறுப்புள்ள நேர்மையுள்ள ஜனநாயக அரசியல் கட்சி செய்ய வேண்டிய முறைமை. அதை நாம் செய்வோம். எமது முடிவுகளை எமக்கு வாக்களித்து தெரிவுசெய்துள்ள, எமது மக்களின் நலன்களை முன்னிட்டு, நாம் ஒற்றுமையாக எடுப்போம்.

அதேவேளை, நாடு இன்று இருக்கும் அவதி நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க அரசுக்கு நாட்டை இயல்பு நிலைக்குக் கொண்டு வர அவகாசம் கொடுக்க வேண்டும். அவசரப்பட்டு எதிர்ப்பு அரசியல் ஆர்ப்பாட்டங்களை செய்யக்கூடாது. அதுவே எங்கள் மக்களின் நிலைப்பாடாகவும் இருக்கின்றது.

பெரும்பான்மை அரசியல் கட்சிகளின் நலன்களைச் சார்ந்து மாத்திரம் தமிழ் முற்போக்குக் கூட்டணி அரசியல் செய்யாது. அரசில் சேருகின்றோமோ, இல்லையோ, புதிய அரசமைப்பு தொடர்பாக நியமிக்கப்பட் டுள்ள அமைச்சருடன் நாம், மலையகத் தமிழ் இலங்கையர்களின் அரசியல் அபிலாஷை களை முன்வைப்போம்.

அடுத்துவரும் அரசமைப்பு திருத்தத்தில் எமது மக்களின் எதிர்பார்ப்புகளை இடம்பெறச் செய்ய எம்மால் ஆனதை நாம் பொறுப்புடன் செய்வோம் - என்றார். (எ-22)


## மரண அறிவித்தல்



**அருட்சகோதரி அமலி டபறேரா தி.கு**

முத்தரிப்புத்துறை, மன்னாரைப் பிறப்பிடமாகவும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி அமலி டபறேரா தி.கு (27.07.2022) புதன்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (28.07.2022) வியாழக்கிழமை பி.ப 3.30 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

121, பிரதான வீதி
யாழ்ப்பாணம்.

தகவல்:
அருட்சகோதரி தியோவ்வின் குருஸ்
மாகாணத் தலைவி.

## வீடு வாடகைக்கு

கல்வியன்காடு சந்திக்கு அண்மையில்
பருத்தித்துறை வீதியில் அனெக்ஸ்
வீடு ஒன்று வாடகைக்கு உண்டு.
உடன் தொடர்புகொள்ளவும்
076 936 2807

## உடனடி வேலைவாய்ப்பு

நவீன இயந்திரங்களுடன் கூடிய உற்பத்தி தொழிற்சாலை

- வெல்டர் (Welders)
- காப்பெண்டர் (Carpenter), உதவியாளர் (Helper)
- MDF Board வேலை தெரிந்தவர்கள், உதவியாளர் (Helper)
- Shutter Board வேலை தெரிந்தவர்கள், உதவியாளர் (Helper)
  - ஆண் தொழிலாளர்கள் மட்டும்
  - நேர்முகதேர்வு 29.07.2022 வெள்ளிக்கிழமை
  - நேரம் 10.00 A.M. - 12 00 மணிவரை

EUT
பலாலி வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு, யாழ்ப்பாணம்.
T.P.: 077 656 6873

## மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 04 . 1950
மறைவு 26 . 07 . 2022

**கணபதிப்பிள்ளை தர்மலிங்கம் (முருகா)**

அல்லாரை தெற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வேலுப்பிள்ளை வீதி, மீசாலை மேற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கணபதிப்பிள்ளை தர்மலிங்கம் (முருகா) நேற்றுமுன்தினம் (26.07 2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி - நல்லதங்கம் தம்பதியரின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், தர்சினியின் (கனடா) பாசமிகு தந்தையும், சிவகரனின் (கனடா) மாமனாரும், அனாமிகாவின் ஆருயிர் பேரனும், அம்பிகைபாகனின் (ஆசிரியர்) அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.07.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible],
மீசாலை.

தகவல் :
குடும்பத்தினர்
077 648 0537

(cs 20098) (2.6)

## கதிர்காமம் உற்சவம்

## விஷேட பஸ் சேவை
## Sinhagiri Express



**ஆரம்பம் : 29.07. 2022**

காலை 5.00
பிற்பகல் 3.50 மணி
யாழ்ப்பாணம் - கதிர்காமம் (தினசரி சேவை)

காலை 5.00 மணி
இரவு 11.00மணி
கதிர்காமம் - யாழ்ப்பாணம் (தினசரி சேவை)

தொடர்புகளுக்கு (யாழ்)
வரணி ஆசனப் பதிவகம்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2868, 077 791 7691
077 604 8921, 077 153 1406

கதிர்காமம் தொடர்புகளுக்கு
077 978 7824
077 529 9015
071 551 4557

ஒரு வழிக்கட்டணம்
2700 /= மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மடை திறந்தாற் போலவரும் கண்டகித்தீர்த்தமே மாவைக்கந்தனின் அருமருந்து

கே.எஸ்.சிவஞானராஜா

மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாக அமைந்த திருத்தலம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலாகும். ஆகமவிதிப்படி அமைந்த புராதன ஆலயம் இதுவாகும். இலங்கையின் சிகரமென விளங்கும் யாழ்ப்பாணத்தின்கண் விளங்கும் காங்கேசன்துறை நகர அருகே நீண்டு செல்லும் பெருவீதியிலே கம்பீரமாக உயர்ந்த கோபுரமாட்சியுடன் அருளாட்சி தருகிறது மாவிட்டபுரம் என்ற இத்திருப்பதி.

அபிஷேகக் கந்தனாக மாவிட்டபுரத்திலும் அலங்காரக் கந்தனாக நல்லூரிலும் அன்னதானக் கந்தனாகச் செல்வச்சந்நிதியிலும் கல்யாணக் கந்தனாக கந்தவனத்திலும் காவடிக் கந்தனாக கதிர்காமத்திலும் அற்புதக்கந்தனாக இணுவையிலும் அதிசயக் கந்தனாக மஞ்சவனப்பதிலும் மாதவக்கந்தனாக மண்டூரிலும் பேறுவக்கும் கந்தனாக பேராதனையிலும் திருவருள் பாலிக்கின்றான்.

மாருதப்புரவீகவல்லி எனும் சோழ இளவரசியின் குதிரை முகம் நீங்கப்பெற்ற அற்புதமும் இராவணன், ஸ்ரீராம பிரான், அருச்சுனன், நளமகாராசன், விஜயன், இயக்கர், நாகர், நகுலமுனிவர் மற்றும் இருடிகள், ரிஷிகள், ராஜ பரம்பரையினர் தவசிரேட்டர்கள், அகத்தியமா முனிவர் ஆகிய பேறானவர்களின் அதிசயமும் ஒருங்கே அமையப்பெற்ற புண்ணியபுரந்தான் மாவிட்டபுரம்.

1805ஆம் ஆண்டிலே சுன்னாகம் முத்துக்குமார கவிராசர் இயற்றிய மாவை சுப்பிரமணியர் தோத்திரத்திலும், 1842 ஆம் ஆண்டில் நல்லூர் ம.சரவணமுத்துப் புலவர் இயற்றிய மாவைக்கந்தன் ஊஞ்சல் பாடலிலும் 1911 இல் புன்னை நகர் வித்துவசிரோன்மணி பிரமஸ்ரீ சி.கணேசையர் இயற்றிய மாவை சுப்பிரமணிய தோத்திரவிருத்தத்திலும் 1895 இல் சுன்னாகம் ஸ்ரீமத் அ.குமாரசாமிப்புலவர் இயற்றிய மாவை கலிவெண்பாவிலும் மாவையின் அதிசயப் பொலிவுகளை வணங்கி மகிழலாம்.

கோவிற்கடவை எனச் சிறப்பித்துக் கூறப்படும் மாவிட்டபுரம், கீரிமலை, காங்கேசன்துறை ஆகிய மூன்று பதிகளும் சோழசாம்ராஜ்ஜியமோடும் மாருதப்புரவீகவல்லியோடும் ஏழு விநாயகர் ஆலயங்களோடு வரலாற்று வரங்களாக மிளிர்கின்றன. சூரசங்காரத்தின் பின்பு மாவிட்டபுரம் எனப் பெயர் கொள்ளுமளவுக்கு முருகப்பெருமான் இளைப்பாறும் பொருட்டு இங்கு தங்கினார் என்று கூறப்படுகிறது. அதுவே

> மாவிட்டபுர மா- மரவடிவாகி நின்ற சூரன்
> விட்ட- அவ்வடிவினை விட்டேகிய
> புரம்- தலம்

மாவிட்டபுரத்தில் தலவிருட்சமாக பிரமாண்டமானதோர் மாமரம் நிற்பது இதனை நினைவூட்டுகின்றது. அடுத்ததாக சோழ இளவரசியான மாருதப்புரவீகவல்லியானவள் தனது குதிரை முகம் நீங்கிய அற்புதமும் அதிசயமும் ஆச்சரியமும் இடம் பெற்ற நிலையில் மாவிட்டபுரம் என்ற காரணம் ஆயிற்று.

> மா- குதிரைமுகம்
> விட்ட- நீங்கி
> புரம்- இடம்
> மாவிட்டபுரம் என்பதாயிற்று.

கோவிற்கடவை என்ற பெருங்குறிச்சியில் மாவிட்டபுரம்- கீரிமலை- காங்கேசன்துறை மூன்று அற்புத நகரங்கள் பேறுகொள்கின்றன.

நகுலமுனிவரின் கீரிமுகம் நீங்கப்பெற்ற தலம் கீரிமலை, மாருதப்புரவீகவல்லியின் குதிரைமுகம் நீங்கப்பெற்ற தலம் மாவிட்டபுரம், காங்கேயன் விக்கிரகம் வந்திறங்கிய இடம் காங்கேசன்துறை.

கோவிற்கடவைக் குருபரனார் உற்சவத்தைச் சேவித்து நிற்பார் யமதண்டம் வெல்லுவாரே. இலங்கையில் உள்ள அத்தனை ஆலயங்களுக்கும் வேதசிவாகமமுறை இங்கு வழிகாட்டுதாலாக அமைகிறது. உஷக்காலம், காலைச் சந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, இரண்டாம் சாமப்பூஜை, அர்த்தசாமப்பூஜை ஆகிய ஆறுகாலப் பூசைகள் சீராகவும் நேரந்தவறாமலும் அரங்கேறுகின்றன. இருபத்தைந்து நாள்கள் உற்சவங்கள் நடைபெறும். யாவுமே பிரமாதமாக நடைபெறுகின்றன. நடனஉற்சவம், கார்த்திகை உற்சவம், சப்பரத் திருவிழா, இரதோற்சவம், ஆடி அமாவாசைத் தீர்த்தம், தண்டாயுதபாணி உற்சவம், தற்போற்சவம், பூங்காவனம் யாவும் அற்புதப் பேறாகவும் ஆன்மிகப் பொலிவாகவும் விளங்குகின்றன.

ஆடி அமாவாசையன்று நடைபெறும் மடைதிறந்தாற் போலப் பொங்கியெழும் கண்டகித் தீர்த்தமாம் அந்தர்வாவியில் மண்ணவரும் விண்ணவரும் பண்ணவரும் தீர்த்தமாடும் ஆனந்தமதை உலகில் எங்குமே காணவில்லை. எமது முந்தையராம் மூதாதையர்கள் பிதிர்க் காரியங்கள் சித்தி பெறு வதற்காக இறங்கி வந்து அவரவர் பேறான வாழ்வுக்காக ஆசீர்வதிப்பதும் நடைபெறும் காட்சி முதன்மையானது. குறிப்பாகத் தந்தையின் ஆத்மசாந்திக்காகவே பிரதானமாக ஆற்றப்படுகின்றது. சித்திராப்பௌர்ணமியானது தாயாரின் ஆத்மசாந்திக்காக அனுட்டிக்கப்படுகிறது. ஆதலால் 'கண்டகித் தீர்த்தமதில் மூழ்கி, நீராடி, கடுவினை களைந்து காலன் பயம் உருண்டோட, சுடுசொற் சொன்னவரையே சென்று தீண்டிட, அவமானங்கள் கொண்டவரை தவமாக்கி வென்றிட கொடுநோய்கள் அனைத்தும் விடுபட்டு விடுதலையாகிட எல்லாவற்றுக்கும் மேலாக நாட்டில் பஞ்சம், பசி, பட்டினி அறவே இல்லாது பயிர்வளம் செழிக்க மாவை முருகன், கண்டகித்தீர்த்தமதில் அடியார்களோடு சேர்ந்து தீர்த்தமாடுகின்றான். தேரிலேறிவந்த களைப்போடு ஆடும் தீர்த்தம் ஊருக்கும் பாருக்கும் ஏருக்கும் வெற்றியைத் தருவதாகட்டும்.

## காத்தோட்டிக்காய்க்கு பெரும் தட்டுப்பாடு

சாவகச்சேரி, ஜூலை 28

ஆடி அமாவாசை விரதத்துக்குப் பயன்படுத்தும் காத்தோட்டிக் காய்க்கு சந்தைகளில் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

கடந்த வருடகாலங்களில் ஆடி அமாவாசை விரதம் ஆரம்பமாகும் ஒரு வாரத்துக்கு முன்னர் சந்தைகளுக்குக் காத்தோட்டிக் காய் விற்பனைக்குக் கொண்டு வரப்படும்.

இந்த வருட ஆடி அமாவாசை இன்று நடைபெறவுள்ள நிலையில், நாட்டில் நிலவும் நெருக்கடியால் இந்த முறை காத்தோட்டிக்காயின் உற்பத்தி குறைவாக இருந்துள்ளது.

இதனால் ஒரு கிலோகிராம் காய் 8 ஆயிரம் ரூபா படி சந்தை வியாபாரிகளுக்கு சிறிதளவு காய்கள் நேற்று வழங்கப்பட்டன. அதனால் சந்தைகளில் ஒரு காத்தோட்டிக்காய் 200 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது. (ஒ-14-9,17)

## படகு மூலம் 6 பேர் தமிழகத்தில் தஞ்சம்

கொழும்பு, ஜூலை 28

கிளிநொச்சி மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த 6 பேர் தமிழகத்துக்கு நேற்று அகதிகளாகப் புலம்பெயர்ந்துள்ளனர்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி காரணமாகவே தாம் தமிழகத்துக்கு வந்துள்ளோம் என அவர்கள் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர்.

தலைமன்னாரிலிருந்து படகு மூலம் நேற்று அதிகாலை தனுஷ்கோடியைச் சென்றடைந்த நிலையில் அவர்களை இந்தியக் கடலோர காவற்படையினர் மீட்டு விசாரணைக்காக மண்டபம் பொலிஸாரிடம் ஒப்படைந்துள்ளனர். இரு குடும்பங்களைச் சேர்ந்த 3 சிறுவர்கள் உட்பட 6 பேரே இவ்வாறு தஞ்சமடைந்துள்ளனர். (ச-இ)

## இலங்கைக்குக் கடத்த முற்பட்ட வலி நிவாரண மாத்திரைகள் தமிழக கியூ பிரிவால் மீட்பு!

சென்னை, ஜூலை 28

தூத்துக்குடி திரேஸ்புரம் கடற்கரையிலிருந்து இலங்கைக்குக் கடத்த முற்பட்ட 4 ஆயிரத்து 430 வலி நிவாரண மாத்திரைகள், தமிழக கியூ பிரிவு பொலிஸாரால் மீட்கப்பட்டன.

தமிழக கியூ பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய குறித்த கடற்கரைப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த படகுகளை சோதனைக்குட்படுத்தினர். அதன் போது பதிவு எண் இல்லாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நாட்டுப் படகொன்றை சோதனை செய்தபோது அதில் சுமார் 443 அட்டைகளில் 150 மில்லிகிராம் அளவையுடைய 4 ஆயிரத்து 430 வலி நிவாரண மாத்திரைகள் மறைத்து வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அதனை யடுத்து படகையும் வலி நிவாரண மாத்திரைகளையும் மீட்ட கியூ பிரிவு பொலிஸார் சுங்கத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-14,113)

## போராட்டத்தில் திருடப்பட்ட புகைக்குண்டுகளுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 28

பொல்துவ சந்தியில் கடந்த ஜூலை மாதம் 13 ஆம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது திருடப்பட்டதாக கூறப்படும் 5 கண்ணீர்ப்புகைக் குண்டுகளுடன் ஏத்துல் கோட்டே பகுதியில் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அதேபகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைதாகியுள்ளார்.

போராட்டத்தன்று பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை ஓட்டோவில் கொண்டு வந்தபோது ஆர்ப்பாட்டக்காரர்கள் சில புகைக்குண்டுகளை எடுத்துக்கொண்டு ஓடினர் என பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரிடம் மேல்மாகாண தெற்கு துணைத்தடுப்புப் பிரிவினர் விசாரணை மேற்கொண்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 02 . 1946



இறப்பு 27 . 07 . 2022

## திருமதி வைத்திலிங்கம் மகேஸ்வரி

பொன்னாவளை களபூமி காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திருமதி வைத்திலிங்கம் மகேஸ்வரி 27.07.2022 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் அபிராமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், . காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராமுப்பிள்ளை வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், காலம் சென்றவர்களான தம்பிராசா (ஓய்வு பெற்ற உப-அதிபர் காரைநகர் இந்துக்கல்லூரி), பாலசிங்கம் (பிரதம லிகிதர் நீர்ப்பாசனத்திணைக்களம், வவுனியா), மற்றும் புவனேஸ்வரி (V.R.T), சங்கரப்பிள்ளை (தன்னை சித்தி விநாயகர் ஆலய அறங்காவலர்) ஆகியோரின் அன்பு சகோதரியும் மனோன்மணி (பேபி டீச்சர் , ஓய்வு பெற்ற ஆசிரியர்) பத்மாசனி, காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை (V.R.T- பிரபல வர்த்தகர், கிளிநொச்சி), சிவபாக்கியம், காலஞ்சென்றவர்களான கனகம்மா, சுந்தரம்மா, மற்றும் பாக்கியம், பாலசிங்கம் ,சிவக்கொழுந்து ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.07.2022) வெள்ளிக்கிழமை காலை 7.00மணிக்கு அன்னாரின் சகோதரரான சங்கரப்பிள்ளையின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக தில்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**சங்கரப்பிள்ளை குடும்பத்தினர்.**

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 28 . 02 . 1935



இறைவன் அடியில் 31 . 07 . 2019

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயிலடியைப்
பிறப்பிடமகவும் அச்சுவேலியை
வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர்**

## செல்லத்துரை கணபதிப்பிள்ளை

**( முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர், கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்.)**

**திதி: ஆடி அமாவாசை**

அன்புள்ள எங்கள் அப்பா....
பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
உற்றார் உறவினர் நண்பர்களுக்கு இனியவராய்
எமக்கெல்லாம் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டினீர்கள்...
நீங்கள் காட்டிய பாதையில் நாம் செல்கிறோம்.
உங்கள் ஆத்மா அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் பாதங்களில்
சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**"செந்தில்"**
**அச்சுவேலி தெற்கு,**
**அச்சுவேலி.**

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## சின்னத்தம்பி நாகேஸ்வரி

ஏழாலை மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நாகேஸ்வரி நேற்று (27.07.2022) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு இராசம்மா ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லப்பா, தெய்வானைபிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பியின் மனைவியும், கோமதி செல்வகுமார் (பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்) மற்றும் காலஞ்சென்ற செல்வரத்தினம், செல்வராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், சுமதி, காலஞ்சென்ற சண்முகநாதன் ஆகியோரின் அன்பு மாமியும், டிலானி, கீர்த்திகன், துவாரகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற கனகம்மாவின் அன்பு தங்கச்சியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2022) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.30 மணிக்கு உசத்தியோடை இந்து மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பெரிய சங்கத்திற்கு அருகாமை,**
**ஏழாலை மேற்கு,**
**சுன்னாகம்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**
**077 3092 856**

# மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 09 . 1964



மறைவு 27 . 07 . 2022

## சிவப்பிரகாசம் சோமதாஸ்

காரைநகர் பலகாட்டை பிறப்பிடமாகவும் இல.32 அரசவீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல வர்த்தகர் சிவப்பிரகாசம் சோமதாஸ் நேற்று (27.07.2022) புதன்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மங்களம்மா தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் வனிதாவின் அன்புக் கணவரும் வைஷ்ணவி, பாலசபரீசன் (சுந்தரம் அன்கோ) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தியாகலிங்கம் மற்றும் லோகேஸ்வரி, கணேசபிள்ளை, காலஞ்சென்ற லோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.07.2022) வெள்ளிக்கிழமை அரசவீதி நல்லூரில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணிக்கு காரைநகர் நீலகிரி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம்

அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. மக்கள் போராட்டத்துக்கு மதிப்பளி, நாட்டைக் கொள்ளையடிக்காதே, ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கு போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (எ-20)

# எரிபொருளை பதுக்கி விற்போரை காட்டித்தந்தால் பணப்பரிசில்கள்!

எரிபொருளைப் பதுக்கி விற்போரை காட்டிக் கொடுத்தால் பணப்பரிசு வழங்கப்படும் என்று பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

பொலிஸ் திணைக்களம் விடுத்துள்ள அறிவிப்பின்படி, 100 லீற்றருக்குக் குறைந்தளவு எரிபொருளைப் பதுக்கி வைத்திருந்து விற்பனை செய்வோரைக் காட்டித்தந்தால் 50 ஆயிரம் ரூபாவும், 100 தொடக்கம் 500 லீற்றருக்கும் இடையிலான அளவு எரிபொருளைப் பதுக்கிவைத்திருந்து விற்பனை செய்வோரைக் காட்டித்தந்தால் 2 லட்சம் ரூபாவும், 500 லீற்றருக்கும் அதிகளவான எரிபொருளைப் பதுக்கிவைத்திருந்து விற்பனை செய்வோரைக் காட்டித்தந்தால் 3 லட்சம் ரூபாவும் சன்மானமாக வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# யாழ். போதனாவின் பணிப்பாளராக மீண்டும் மருத்துவர் சத்தியமூர்த்தி!

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளராக, மருத்துவர் த.சத்தியமூர்த்தி நேற்றையதினம் மீண்டும் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். ஒன்றரை வருடங்கள் மேற்படிப்புக்காக இங்கிலாந்து சென்றிருந்த சத்தியமூர்த்தி, தனது கல்வியை முடித்துக் கொண்டு மீண்டும் பணிப்பாளராக நேற்றையதினம் கடமைகளைப் பொறுப்பேற்றார். (அ-ம-20-125)

# சாகலவுக்கு பாதுகாப்பு ஆலோசகர் பதவி!

கொழும்பு, ஜூலை 28

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிக்குழு தலைவராக, முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். இந்தப் பதவிக்கு மேலதிகமாக அவர், பாதுகாப்பு விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் மூத்த ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனங்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வழங்கப்பட்டுள்ளன. கடந்த நல்லாட்சி அரசாங்க காலப்பகுதியில் சட்டம் ஒழுங்கு அமைச்சராக சாகல ரத்நாயக்க கடமையாற்றிய நிலையில், முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக நியமித்த பின்னர் பிரதமரின் பணிக் குழுத் தலைவராக அவர் நியமிக்கப்பட்டிருந்தார். இவ்வாறான நிலையிலேயே தற்போது அவர் ஜனாதிபதியின் பணிக்குழு பிரதானியாகவும், பாதுகாப்பு விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் மூத்த ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (ஒ-இ)

## புதிய...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருவரும் நேற்றையதினம் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர். இதன்போதே ஜூலி சங் இவ்வாறு தெரிவித்தார். இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் நிலவும் உறவுகளை, வலுவான அணுகுமுறையின் மூலம் முன்னெடுத்துச் செல்வது குறித்தும் இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ம)


# மரண அறிவித்தல்

பிறப்பு
01
02
1953



இறப்பு
27
07
2022

## யோகநாதன் - சோதீஸ்வரி

யாழ். உசனைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி தெற்கை வதிவிடமாகவும் கொண்ட யோகநாதன் சோதீஸ்வரி அவர்கள் நேற்று (27.07.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சின்னப்பிள்ளை தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்ற கந்தையா சரஸ்வதி ஆகியோரின் அன்பு மருமகளும், சின்னத்துரை, காலஞ்சென்றவர்களான சிவம், தங்கம்மா மற்றும் சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற யோகநாதன் அவர்களின் அன்பு மனைவியும், வினோதன் (டுபாய்), சுபேதினி (குடும்ப நல உத்தியோகத்தர், கோப்பாய் MOH அலுவலகம்), காயத்திரி (கனடா), வித்தகன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சயந்தன் (பொதுச்சுகாதார பரிசோதகர், புலோலி), கௌதமன் (கனடா), பிரேமிளா ஆகியோரின் அன்பு மாமியாரும், சோபிசாந், கரிசாந், முகிலன், காவேரி, காவியா, அகநயன், அஸ்வினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2022) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பாலர் பகல் விடுதி
முதலாம் ஒழுங்கை,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
சுபேதினி (மகள்) - 077 [illegible]
வித்தகன் (மகன்) - 077 077 5867

(CR 3[illegible]22)


## ஊசிமூலம்...

உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பாரதிபுரத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த இளைஞர் போதைப்பொருளுக்கு அடிமையாகிய நிலையில், இருதயத்தில் கிருமித்தொற்று ஏற்பட்டு நீண்டகாலச் சிகிச்சைகளின் பின்னர் உடல் நிலை தேறியிருந்தார். எனினும் இனியும் போதைப்பழக்கத்தை தொடர்ந்தால் அது ஆபத்தாகிவிடுமென அவரை மருத்துவர்கள் அண்மையில் எச்சரித்திருந்தனர். எனினும் நேற்றுமுன்தினம் மீளவும் ஊசிமூலம் போதைப் பொருளை இளைஞர் எடுத்துக்கொண்ட நிலையில் அவர் சுகவீனமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார். இளைஞரின் உயிரிழப்புக்கு போதைப் பொருளினால் இருதயத்தில் ஏற்பட்ட கிருமித்தொற்றுதான் காரணம் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

ஊசி மூலம் ஹெரோய்ன் ஏற்றியதால், இந்த மாதத்தில் மட்டும் யாழ்ப்பாணத்தில் சம்பவித்த இரண்டாவது உயிரிழப்பு இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## சுமந்திரனின்...

பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான சித்தார்த்தன்.

சித்தார்த்தன் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:-

சுமந்திரன் சில விடயங்களை ஆர்வக்கோளாறில் கதைத்து வருகின்றார். கார[illegible]வக்குறைவால் வருகிற [illegible]ளோ தெரியவில்லை. அண்மையில்கூட ஜனாதிபதி வேட்பாளர் மீதான வாக்கெடுப்பின்போது இந்தியாவின் ஈடுபாடு தொடர்பாகப் பகிரங்கப்படுத்திய சுமந்திரனின் கருத்துக்கு, தமிழரசுக்கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா தனது அதிருப்தியை வெளியிட்டிருந்தார். குறிப்பாக தூதரகங்களோடு கலந்துரையாடுகின்றபோது மிகக் கவனமாகச் செயற்படவேண்டும். மாறாக தூதரக முறுகல்களையோ அல்லது நாடுகளுக்கு இடையிலான முறுகல்களையோ ஏற்படுத்தும் வகையில் எமது செயற்பாடுகள் அமையக்கூடாது.

கடந்த அரசாங்கத்தின் காலத்திலேயே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடைய ஊடகப் பேச்சாளராக சுமந்திரன் காணப்பட்டார். இந்தமுறை நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்ற பின்பு இருவருடைய பெயர்கள் ஊடகப் பேச்சாளருக்காகப் பிரேரிக்கப்பட்டன. ஒருவர் சிறீதரன் மற்றையவர் அடைக்கலநாதன். இருவருக்கும் தலா 5 வாக்குகள் கிடைத்தன. எனவே கூட்டமைப்பின் பேச்சாளர் தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என்று கூட்டப்பிமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவித்தார். எனினும், எந்தப் பதிலும் இதுவரை வழங்கப்படவில்லை. கூட்டமைப்பில் தற்சமயம் ஊடகப்பேச்சாளர் இல்லாத நிலையே காணப்படுகின்றது. இதனால், எமது 10 உறுப்பினர்களுமே தற்போது பேச்சாளர் போன்றுதான் காணப்படுகின்றனர் - என்றார். (அ-ம-125)

## வாள்வெட்டு...

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

வாள்வெட்டுக்கு இலக்கான முள்ளியவளை தெற்கைச் சேர்ந்த குடும்பத் தலைவரான பெருமாள் சதீஸ்வரன் (வயது -32) என்ற நபர் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிகவிசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி அமாவாசைக்கு வடமாகாணத்தில் பாடசாலைகளுக்கு சிறப்பு விடுமுறை!

யாழ்ப்பாணம், ஜூலை 29

ஆடி அமாவாசை தினமான இன்றைய தினம் பாடசாலைகளுக்குச் சிறப்பு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

ஆடி அமாவாசை தினமான இன்றைய நாள் சைவ மக்கள் தமது தந்தையை நினைத்து பிதிர்க்கடன் செய்யும் விசேட வழிபாட்டு நாள். எனவே ஆடி அமாவாசையை விடுமுறை தினமாக அறிவிக்குமாறு, ஆறு.திருமுருகன் கோரிக்கை விடுத்திருந்தார். இந்த நிலையிலேயே இன்றையதினம் வடக்குமாகாணத்தில் உள்ள பாடசாலைகளுக்கு சிறப்பு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இன்றைய தினத்துக்குப் பதிலாக பிறிதொரு தினத்தில் பாடசாலைகள் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## போராட்டக்காரர்களை...

'அரகலய' என்று பெயரிடப்பட்ட, காலிமுகத்திடல் போராட்டத்தில் முன்னணியில் நின்றவர்களையே இவ்வாறு தனித்தனியாக கைது செய்து, அவர்களைப் பழிவாங்கும் படலத்தை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. இதன் ஒருபகுதியாக இந்தப் போராட்டங்களில் கலந்துகொண்ட ருகுணு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவரும் அரசியல் செயற்பாட்டாளரும் ஊடகவியலாளருமான அந்தோனி வெரங்க புஷ்பிக வாகனமொன்றில் நேற்றுக் கடத்தப்பட்டுள்ளார்.

கோத்தாபய அரசாங்கத்துக்கு எதிராகவும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அவர் தலைமையிலான அரசாங்கத்துக்கு எதிராகவும் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றவர் அந்தோனி வெரங்க புஷ்பிக. கோட்டை ரயில் நிலையம் முன்பாக நேற்று இடம்பெற்ற அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் வீடு திரும்புவதற்காக அவர் பேருந்தில் ஏறியபோது, அந்தப் பேருந்துக்குள் நுழைந்த 8 பேர் அவரை வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்று, பலவந்தமாக ஜீப் ரக வாகனத்தில் ஏற்றிக் கொண்டு சென்றுள்ளனர்.

அரசாங்கத்துக்கு எதிராகப் போராடி வந்த நபர்கள் அண்மைக்காலமாக இலக்குவ்வக்கப்பட்டு தண்டனைக்கு உள்ளாக்கப்படுகின்றமையும், சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுகின்றமையும் தொடர்கதையாகி வருகின்ற நிலையிலேயே அந்தோனி வெரங்க புஷ்பிக கடத்தப்பட்டுள்ளார்.

இந்த விடயத்தில், மனித உரிமைகள் ஆணைக்குழு தலையீடு செய்த பின்னர், 'அந்தோனி வெரங்க புஷ்பிக கடத்தப்படவில்லை. அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்' என்று பொலிஸார் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை - நேற்றுமுன்தினமும், போராட்டக்களத்தின் முன்னணிச்செயற்பாட்டாளரான தனிஸ் அலி, டுபாய்க்கு செல்லமுயன்றவேளை விமானத்துக்குள் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார். அத்துடன், ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம் என்பவற்றுக்குள் நுழைந்த போராட்டக்காரர்களை, அங்கிருந்த பொருள்களைத் திருடினர் அல்லது சேதப்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் பொலிஸார் தொடர்ச்சியாகக் கைது செய்துவருகின்றனர்.

மேலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் பிடித்துச் சென்று, அவர்களைச் சித்திரவதை செய்து, தண்டவாளத்தில் முழந்தாளிட்டு நடக்கச் செய்து கொடூரங்களைப் புரிவதாக தெற்காசியாவைச் சேர்ந்த 150 க்கும் அதிகமான புத்திஜீவிகள் அறிக்கையொன்றின் மூலம் அம்பலப்படுத்தியிருந்தனர்.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வெள்ளைவான் கடத்தல் கலாசாரத்துக்காகப் பெரிதும் அறியப்பட்டவர். அவர் பதவி விலகிய பின்னர் கோத்தாபயவின் அனுசரணையுடன் ஆட்சிப்பீடம் ஏறியுள்ள ரணிலும், கோத்தாபயவின் நிழல் அரசாங்கத்தையும் சர்வாதிகாரத்தையும் முன்னெடுக்கின்றாரா என்ற கேள்விகளை, போராட்டக்காரர்களை தனித்தனியாக கைது செய்யும் சம்பவங்கள் எழுப்பியுள்ளன.

ரணில் அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை நாடாளுமன்றில் நிறைவேற்றி, அதை நீடித்திருப்பதன் மூலம் , அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி போராட்டக்காரர்கள் மீதான அரசாங்கத்தின் கொலைவெறிப்பாய்ச்சல் இன்னும் அதிகரிக்கும் என்ற அச்சமும் எழுந்துள்ளது. (அ-ம)

## அவசரகாலச்....

நிலைமை நீடிக்கும். இதற்கான பிரேரணை 57 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பதில் ஜனாதிபதியாகச் செயற்பட்டவேளை, கடந்த ஜூலை 17ஆம் திகதி பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவசரகால நிலைமையை அறிவித்தார்.

அவசரகாலநிலைமைபிரகடனப்படுத்தப்பட்டு, 14 நாள்களுக்குள் நாடாளுமன்றத்தின் அனுமதி பெறப்படாவிட்டால் அது இரத்தாகிவிடும். எனவே, அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணையை சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த நாடாளுமன்றத்தில் நேற்று முன்வைத்தார். மாலை 5.25 மணிவரை இது தொடர்பான விவாதம் இடம்பெற்றது.

அதன்பின்னர் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பான பிரேரணை மீது எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்ன் கிரியெல்ல வாக்கெடுப்பைக் கோரினார். இதனையடுத்து இலத்திரனியல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பன அவசரகாலச் சட்டத்துக்கு எதிராக வாக்களித்தன. டலஸ் அழகப்பெரும தலைமையிலான அணியும் எதிராகவே வாக்களித்தது.

பொதுஜன பெரமுனவும், அரச பங்காளிக் கட்சிகளும், விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார உள்ளடங்கலான சுயாதீன அணியும், இ.தொ.கா.வும் ஆதரித்து வாக்களித்தன. இதேவேளை - சுதந்திரக் கட்சியில் இருவர் ஆதரவாக வாக்களிக்க ஏனையோர் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. சபாநாயகர் தவிர்ந்து 41 எம்.பிக்கள் (ஆளும் மற்றும் எதிரணி) வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-22)

## மூத்த...

அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன், வடமாகாண பேரவை செயலகத்தின் செயலா[illegible], வடமாகாண விவசாய பணிப்பாளர் சி.சிவகுமாரன், வடமாகாண கட்டடங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் க.மோகனதேவன் ஆகியோருடைய பதவிகளே, வடமாகாண ஆளுநரால் மீளப் பெறப்பட்டு ,அவர்களுடைய அதிகாரங்கள் ஆளுநரால் வெறிதாக்கப்பட்டுள்ளன.

மத்திய அரசால் மூத்த அதிகாரிகள் புதிய பதவிநிலைகளுக்கு கோரப்படாத நிலையில், மாகாணத்தில் அவர்களது நியமனங்கள் வெறிதாக்கப்பட்டுள்ளன. இதனால், மாகாணத் தலைமைச் செயலாளரின் அலுவலகத்தில் அவர்கள் நால்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் அறிக்கையிட வேண்டும் எனவும் பணிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் செயற்றிறன் மிக்க மூத்த அதிகாரிகள் , ஆளுநரின் தன்னிச்சையான நடவடிக்கைகளுக்கு தடையாக இருந்தனர் எனவும், அதனாலேயே குறித்த நால்வரின் பதவிநிலையும் தன்னிச்சையாக ஆளுநரால் பறிக்கப்பட்டுள்ளது என்றும் நிர்வாகசேவை அதிகாரிகள் மட்டத்தில் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை - தனது நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்காத வடமாகாண நிர்வாகசேவை அதிகாரிகளை ஆளுநர் பந்தாட முனைகின்றார் என்று உதயன் முன்னரே வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

## அமைச்சைப்...

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டு வருகின்றார் என்றும் ஐக்கிய மக்கள் சக்திக்கு 8 அமைச்சுகள் வழங்கப்படவுள்ளன என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன. அவ்வாறு 8 அமைச்சுகள் ஐக்கிய மக்கள் சக்திக்கு வழங்கப்படும் பட்சத்தில் ஹர்ஷ டி சில்வாவுக்கு நிதி அமைச்சும், பொன்சேகாவுக்குப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சும் வழங்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையிலேயே அமைச்சுப் பதவியைப் பெறுவதற்கு எவருடனும் பேச்சு நடத்தவில்லை என்று தெரிவித்துள்ளார் ஹர்ஷ டி சில்வா.

இதேவேளை - சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்திக்கு இதுவரையில் உத்தியோகபூர்வமாக அழைப்புகள் எதுவும் வரவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். (அ-ம)

## உதவிக்கான...

வழங்கவில்லை என்று தெரிவித்தார் யு.எஸ்.எய்ட் அமைப்பின் தலைமை நிர்வாகி சமந்தா பவர்.

புதுடில்லியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்கான உதவும் மிக முக்கியமான நடவடிக்கைகளில் இந்தியா துரிதமாக ஈடுபட்டது. ஆனால், சீனா இலங்கையின் நிவாரணக் கோரிக்கைக்கோ உதவிக்கான குரலுக்கோ செவிசாய்க்கவில்லை.

ஏனைய கடன்வழங்குநர்களைவிட வெளிப்படைத் தன்மையற்ற கடன்களை உயர் வட்டிக்கு வழங்கியதன் மூலம் சீனா இலங்கைக்கு பெருமளவு கடன்வழங்கிய நாடாக மாறியது. இலங்கைக்கு உதவுவதற்காக சீனா கடன்மறுசீரமைப்பில் ஈடுபட வேண்டிய தேவை தற்போதுள்ளது. ஆனால், சீனா அதைச் செய்யுமா?

ஒருபோதும் பயன்படுத்தப்படாத துறைமுகம், சந்தேகத்துக்குரியதானதும் பயன்படுத்தப்படாததுமான உட்கட்டமைப்பு என்பவற்றை இலங்கையில் அமைப்பதற்கு வழங்கிய உதவிகள் மூலமே இலங்கைக்கு உதவி வழங்கிய நாடுகளின் பட்டியலில் சீனா முன்னிலையில் உள்ளது. உதவிகள் வழங்கும்போதும் ஜனநாயகக் கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமான விடயம் - என்றார். (அ-ம)

## ரணிலை...

புளொட்டின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன்.

கந்தரோடையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத்தில் அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதித் தெரிவின்போது, நான் ஜனாதிபதி ரணிலிடம் இருந்து சுமார் ஆறு கோடி ரூபா வரையில் பணத்தைப் பெற்றுக்கொண்டு அவரை ஆதரித்தேன் என்று உண்மைக்குப் புறம்பான தகவல்கள் பரப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தத் தகவல்கள் ஆதாரமற்ற வெற்றுத் தகவல்கள்.

பொதுமக்களும் விமர்சனங்களை முன்வைப்பவர்களும் ஒரு விடயத்தை நன்றாக விளங்கிக்கொள்ளவேண்டும். எனது குடும்பம் தேசிய கல்வியியற் கல்லூரிக்காக வழங்கிய காணி அந்தக் காலத்திலேயே சுமார் 30 கோடி ரூபா முதல் 40 கோடி ரூபா வரையான பெறுமதியுடையது. இன்று அதன் பெறுமதி இன்னும் பல மடங்கு அதிகரித்திருக்கும். அது மாத்திரமல்ல ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுப்பிரமணியம் பூங்கா என்பனவற்றுக்காக நாங்கள் வழங்கிய கொடைகளும் ஏராளம். பணம் தேவையென்றால் இதை நாங்கள் கொடுத்திருக்க வேண்டியது அவசியமில்லை.

### கூட்டமைப்பை நலினப்படுத்த திட்டமிட்டு விமர்சனங்கள்

பொதுவாகவே தேர்தல் காலங்களின் போதும், நாடாளுமன்ற வாக்கெடுப்புக்களின் போதும் கூட்டமைப்புக்கு எதிராக இவ்வாறான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றமை வேதனைக்குரியது. கூட்டமைப்பை நலினப்படுத்துவதற்காக ஆதாரபூர்வமற்ற இந்தத் தகவல்கள் பரப்பப்படுகின்றன. நாங்கள் எவரும் கட்சி எடுத்த தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்கவில்லை. கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக எவரும் செயற்பட்டுள்ளார்கள் என்று நான் நம்பவும் இல்லை.

துயரமான விடயம் என்னவென்றால், கூட்டமைப்புக்குள் இருக்கின்ற சில நாடாளுமன்ற உறுப்பினர்களே மற்றைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது சேறுபூசும் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர். அடுத்த தேர்தலில் விருப்பு வாக்குகளை தாம் அதிகம் பெறவேண்டும் என்பதற்காக இதை முன்னெடுக்கின்றனர். இந்த சேறுபூசல்களால் கூட்டமைப்புத்தான் பலவீனப்படும் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். இந்த நலினப்படுத்தல்கள் சிங்கள பேரினவாதத்தை மேலும் வளர்த்துவிடுவதற்குத்தான் வழிகளை ஏற்படுத்தும் - என்றார். (அ-ம-125)

## மஹிந்த,...

எதிராளிகள் நாட்டை விட்டு வெளியேறுவதற்குத் தடை விதிக்க வேண்டும் என்றும் மனுதாரர்கள் வலியுறுத்தியிருந்தனர். இந்த நிலையிலேயே மஹிந்த, பஸிலுக்கு ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி வரை பயணத்தடை விதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண எரிபொருள் விநியோக விவரம் (இன்று, நாளை)

## இன்று டீசல் விநியோகம் இடம்பெறும் நிரப்பு நிலையங்கள்

சாவகச்சேரி ப.நோ.கூ.ச., யாழ்ப்பாணம் எஸ்.சரவணபவன், சங்கானை ப.நோ.கூ.ச., குருநகர் மீனவர் சங்கம், மருதனார் மடம் எஸ். தர்மவரதன், வல்வெட்டித்துறை திருமதி ஏ.பத்மநாதன், மந்திகை யோகேஸ்வரி சின்னையா, திருநெல்வேலி இரத்தினம் நிரப்பு நிலையம், பரந்தன் கரைச்சி வடக்கு ப.நோ.கூ.ச., வாடியடி பூநகரி ப.நோ.கூ.ச, அக்கராயன்குளம் அக்கராயன் ப.நோ. கூ.ச., மன்னார் ஐ.சார்லஸ் நிர்மலநாதன், திருக்கேதீஸ்வரம் என்.சண்முககுமரன், நாயாறு முல்லைத்தீவு மீனவர் கூட்டுறவுச் சங்கம், ஒட்டுசுட்டான் முத்துஐயன்கட்டு ப.நோ.கூ.ச., விசுவமடுகுளம் விசுவமடு விவசாயிகள் கூ.ச., வவுனியா தெற்கு ப.நோ.கூ.ச., ஜி.எச்.ஏ.டி. சில்வா அன்ட் கொம்பனி

## நாளை டீசல் விநியோக நிரப்பு நிலையங்கள்

யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம், சங்கானை ப.நோ.கூ.ச., சிறுப்பிட்டி என்.விஸ்வலிங்கம், கைதடி தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.ச., நல்லூர் ப.நோ.கூ.ச., சுன்னாகம் என்.எஸ்.நாகலிங்கம் அன் சன்ஸ், புங்குடுதீவு ப.நோ.கூ.ச., கிளிநொச்சி பி.தம்பிப்பிள்ளை, ஏ-9 வீதி கிளிநொச்சி யுனைட்டெற் எரிபொருள்.நி.நி., முருங்கன் எஸ்.அன்ரன், மன்னார் மாந்தைமேற்கு ப.நோ.கூ.ச., தாராபுரம் எம்.ஜே.எம்.அஸ்லம், புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.ச., முள்ளியவளை கே.மகேந்திரன், வவுனியா சி.பரமநாதன், வவுனியா எ.எம்.தனநாயகம், வவுனியா சண்முகம் ஆனந்தராஜா.

## இன்று பெற்றோல் விநியோகிக்கும் நிரப்பு நிலையங்கள்

நல்லூர் கே. தேவகுருநாதர், அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம், யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம், சங்கானை ப.நோ.கூ.சங்கம், யாழ்.நகர் லிவர்பூல் நெவிக்கேசன், சிறுப்பிட்டி என்.விஸ்வலிங்கம், நெல்லியடி கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.ச., மானிப்பாய் பரிஸ் ப.நோ.கூ.சங்கம், அச்சுவேலி வலி.கிழக்கு பிரிவுக்கான ப.நோ.கூ.சங்கம், புங்குடுதீவு ப.நோ.கூ.ச., கோப்பாய் எ.எம். தனநாயகம், யாழ்ப்பாணம் முருகேசு குணரத்தினம், சுன்னாகம் திருமதி ஜே.கனகராசன் சகோதரிகள், தெல்லிப்பழை கந்தசாமி லோகராணி, கிளிநொச்சி பி. தம்பிப்பிள்ளை, கிளிநொச்சி கரைச்சி தெற்கு ப.நோ.கூ.ச., பளை எம்.கனகரத்தினம், சிறி தோப்பு மன்னார் ப.நோ.கூ.ச., நானாட்டன் மன்னார் ப.நோ.கூ.ச., மன்னார் மடு தேவாலயம், முல்லைத்தீவு கரைதுறைப்பற்று ப.நோ.கூ.ச., முள்ளியவளை கே. மகேந்திரன், வவுனியா சி.பரமனாந்தன், ஓமந்தை வவுனியா ப.நோ.கூ.ச., வெங்கலச்செட்டிக்குளம் ப.நோ.கூ.ச., வவுனியா சண்முகம் ஆனந்தராஜா, நெடுங்கேணி என்.சாந்தரட்ணம்

## நாளை பெற்றோல் விநியோக நிரப்பு நிலையங்கள்

உரும்பிராய் ஜே.நடராசா, புன்னாலைக்கட்டுவன் சி.வேதநாயகி, கோப்பாய் வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.ச., உடுவில் சுன்னாகம் ப.நோ.கூ.ச, யாழ்ப்பாணம் மாக்பெட் நிறுவனம், வேலணை ப.நோ.கூ.ச., ஊர்காவற்றுறை ப.நோ.கூ.ச., குஞ்சர்கடையடி உடுப்பிட்டி ப.நோ.கூ.ச., வல்வெட்டித்துறை திருமதி எ.பத்மநாதன், பருத்தித்துறை ஜே.சிறீசங்கர், மந்திகை யோகேஸ்வரி சின்னையா, திருநெல்வேலி இரத்தினம்நி.நி., கொக்குவில் கே.ஜெயப்பிரணவன், சண்டிலிப்பாய் தர்சினி கண்ணதாசன், பரந்தன் கரைச்சி வடக்கு ப.நோ. கூ.ச., முழங்காவில் பூநகரி ப.நோ.கூ.ச., தலைமன்னார் எம்.எஸ்.என்ரபிறைசஸ், திருக்கேதீஸ்வரம்- என்.சண்முகக்குமரன், தாராபுரம்- எம்.ஜே.எம்.அஸ்லம், மாங்குளம்- வவுனியா வடக்கு ப.நோ.கூ.ச., நாயாறு முல்லைத்தீவு மீனவர் கூ.ச. துணுக்காய் மல்லாவி - துணுக்காய் ப.நோ.கூ.ச., ஒட்டுசுட்டான் முத்தையன்கட்டு ப.நோ.கூ. ச., செட்டிகுளம் கே.எம்.லியாகத் அலி, புளியங்குளம் எஸ். கே.காதர், வேப்பங்குளம் ஜி.எச்.எ.டி. சில்வா அன்கொம்பனி.

**வேலையாள்கள் தேவை**

யாழ்நகரில் இயங்கும்
பிரபல்யமான உணவகத்திற்கு
சிற்றுண்டி. கொத்துரொட்டி.
போடத்தெரிந்த
இருவர் தேவைப்படுகின்றார்கள்

076 816 2331, 074 115 4643

# குரங்கு அம்மைக்கு பெரியம்மை தடுப்பூசி

## ஐரோப்பிய ஒன்றியம் அனுமதி


வொஷிங்டன், ஜூலை 28

குரங்கு அம்மை பரவலுக்கு பெரியம்மைக்கான தடுப்பூசியைப் பயன்படுத்த ஐரோப்பிய ஒன்றியம் அனுமதி அளித்துள்ளது.

குரங்கு அம்மை நோய்ப் பரவல் முதன்முதலில் ஆபிரிக்கா நாடுகளில் பரவி தற்போது உலகம் முழுவதும் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றது.

இதுவரை உலகம் முழுவதும் 72 நாடுகளில் 16 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. உலக சுகாதார அமைப்பு குரங்கு அம்மை பரவலை சர்வதேச அவசர நிலையாக அறிவித்துள்ளது.

இந்தநிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தில் பெரியம்மை நோய்க்காகப் பயன்படுத்தப்படும் 'இமான்வேக்ஸ்' தடுப்பூசியை குரங்கு அம் மைக்கும் பயன்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



**வேலையாட்கள் தேவை**

யாழில் பிரபல உயர்தர சைவ உணவகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.
(1) சுத்திகரிப்பாளர் (Cleaner) (2) உணவு பரிமாறுபவர் (Waiter)
(3) உதவியாளர் (Helper)
ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 711 2269

**காணி விற்பனைக்கு**

யாழ் நாவற்குழியில் 69 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

- A.09 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரத்தில் மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A.09 வீதியில் இருந்து 200 m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று லட்சம் (300000/-)
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.

பார்வை இடும் நேரம்
காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு
076 490 5403, 076 491 2493,076 490 6029



## ஆடிஅமாவாசை விரதத்தால் எகிறியது மரக்கறி விலை

யாழ்ப்பாணம், ஜூலை 28

இந்துக்களால் இன்று கடைப்பிடிக்கப்படும் ஆடிஅமாவாசை விரதம் காரணமாக மரக்கறிகளின் விலை வழமையைவிட நேற்று அதிகரித்துக் காணப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, கத்தரிக்காய் ஒரு கிலோ 400 ரூபாவாகவும், பாகற்காய் ஒரு கிலோ 800 ரூபாவாகவும், பயிற்றங்காய் ஒரு கிலோ 600 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டன. அதனைவிட ஏனைய மரக்கறிவகைகளும் ஒரு கிலோ 200 ரூபாவுக்கு மேல் விற்கப்பட்டன.

திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார் மடம் போன்ற சந்தைகளில் பெரும் எண்ணிக்கையான மக்கள் முண்டியடித்து மரக்கறி வகைகளைக் கொள்வனவு செய்தனர். (ஒ-14,17)

## மண்சட்டிக்கு மவுசு

யாழ்ப்பாணம், ஜூலை 28

ஆடி அமாவாசையை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் மண்சட்டிகளுக்கு பெரும் மசுவு ஏற்பட்டுள்ளது.

இன்று ஆடி அமாவாசை விரதம் என்பதால் மண்சட்டிகள் வன்னிப் பகுதியிலிருந்தும் வேறு பகுதியிலிருந்தும் யாழுக்கு எடுத்து வரப்பட்டன.

பல எண்ணிக்கையான மக்கள் மண்சட்டியைக் கொள்வனவு செய்ததால் மண்சட்டிகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதோடு மண்சட்டிகளின் விலையும் நேற்று அதிகரித்துக் காணப்பட்டது. (ஒ-14,17)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.